Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 19, 2022

செவ்வாய்க்கிழமை ஜூலை 19, 2022 | ஒளி: 08 கதிர்: 052 | பக்கம்:09 | நகரப்பதிப்பு | FREE

## 50 கண்ணீர்புகை குண்டுகளை திருடியவர் சிக்கினார்



50 கண்ணீர் புகை குண்டுகளை வைத்திருந்த நபரொருவர், இராஜகிரிய ஒபேசேகரபுர பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்று வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

'கோட்டா கோ கம' போராட்ட செயற்பாட்டாளர்களில்

# மூவருக்கு ரூ. 4.5 கோடி வெளிநாட்டு நிதி


காலி முகத்திடலில் அமைந்துள்ள 'கோட்டா கோ கம' போராட்டத்தளத்தின் முன்னணி செயற்பாட்டாளர்கள் மூவருக்கு, வெளிநாடுகளில் இருந்து பெருமளவு நிதி கிடைக்கப் பெற்றுள்ளமை குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

'ரட்டா' என அழைக்கப்படும் ரத்திது சேனாரத்ன, திலான் சேனாநாயக்க, அவிஷ்க விராஜ் கோனார ஆகிய மூன்று செயற்பாட்டாளர்கள் கடந்த வாரம் இலங்கை வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் மூன்று புதிய கணக்குகளை ஆரம்பித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## இலங்கை குறித்து பாப்பரசர் கவலை



இலங்கையில் நிலவி வரும் குழப்பநிலை குறித்து கவலை தெரிவித்த பாப்பரசர் பிரான்சிஸ், இலங்கையில் நிலவும் நெருக்கடிக்கு அமைதியான முறையில் தீர்வு காண அனைத்து தரப்பினரும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தொடர்ச்சி P2

இடைக்கால ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக,

# இன்று வேட்பு மனு: நாளை வாக்கெடுப்பு

### ஏற்பாடுகள் பூர்த்தி; பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது

பா.நிரோஸ்


இடைக்கால ஜனாதிபதி தெரிவுக்கான வேட்புமனுக்களை பெற்றுக்கொள்வதற்காக பாராளுமன்றம் இன்று (19) கூடுகிறது. குறுகிய நேரத்துக்கே இன்றைய பாராளுமன்ற அமர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

நாட்டு மக்களின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில், நாட்டை விட்டு வெளியேறியிருந்த கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்து விலகி இருப்பதால், இடைக்கால ஜனாதிபதி பதவிக்கு பாராளுமன்றத்தில் நாளை (20) இரகசிய வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. அதற்கமைய ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட விரும்புகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் வேட்பு மனுக்களை பெற்றுக்கொள்வதற்காக மாத்திரம் பாராளுமன்றம் இன்று (19) கூடவுள்ளது.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விவகாரம்:

# இங்கிலாந்து புலனாய்வு சேவைகளின் உதவியைக் கோருவேன்



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் முழுமையற்ற விசாரணையின் காரணமாக இங்கிலாந்து அரசாங்கம் மற்றும் அவர்களின் புலனாய்வு சேவைகளின் உதவியை கோருவதாகவும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

விசேட அறிவிப்பொன்றை நேற்று (18) விடுத்தே அவர், மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மே 13ஆம் திகதி தாம் பிரதமராகப் பதவியேற்ற போது, நாளொன்றுக்கு 5 மணித்தியாலங்கள் மின்வெட்டு ஏற்பட்டதன் மூலம் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது.

தொடர்ச்சி P2

## ரணிலே தெரிவானால் பிரதமராக தினேஷ்

### ஆளுந்தரப்பு கூட்டத்தில் ஆலோசனை

ஆர்.யசி

தற்போதைய பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாக நியமித்து, சபை முதல்வர் தினேஷ் குணவர்தனவை பிரதமராக நியமிக்கும் யோசனை ஒன்றினை ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஜனாதிபதி பதவி இராஜினாமாவை அடுத்து பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ள நிலையில், இடைக்கால ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பு நாளை இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சி P2

## "துரோகமிழைக்க மாட்டேன்"

பா.நிரோஸ்



காலி முகத்திடல் போராட்டத்துக்கு தாம் ஒரு போதும் துரோகம் இழைக்கவில்லை எனவும் எதிர்காலத்திலும் அந்நிலைப்பாடு மாறாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வரிசையில் நிற்காதீர்; 21 முதல் எரிபொருள்

தேசிய எரிபொருள் அனுமதிச்சீட்டின் அடிப்படையில் எதிர்வரும் வியாழக்கிழமை (21) முதல் எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குமார ராஜபக்ஷ, நேற்று (18) தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வரிசைகளில் நிற்பதால் எந்தப் பயனும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வியாழக்கிழமை முதல், கியூஆர் குறியீடு மற்றும் வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் மட்டுமே எரிபொருள் விநியோகிப்படும் என்று தெரிவித்த அவர், தற்போது வரிசையில் நிற்கும் மக்களை வரிசைகளில் இருந்து வெளியேறுமாறும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## வைத்தியசாலைகள் முடங்கும் அபாயம்

### அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## பொலிஸாருடன் முறுகல்; நகரசபை உறுப்பினர் கைது

க.அகரன்



வவுனியா - மன்னார் வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அரச ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நேற்று (18) ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக, வவுனியா நகரசபை உறுப்பினர் எம்.எஸ். அப்துல் பாரி உள்ளிட்ட இருவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## ஓட்டோவுக்கு குறைகிறது; பஸ் கட்டணமும் குறையும்?



எரிபொருள் விலை திருத்தத்துக்கு அமைய பஸ் கட்டணத்தை குறைக்கத் தயார் என்றும் பஸ் கட்டண திருத்தம் தொடர்பான தேசிய கொள்கையின் அடிப்படையில் பஸ் கட்டணங்கள் திருத்தப்பட வேண்டும் என்றும் அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பாடசாலை வாகனங்களுக்கு

## எரிபொருள் பொறிமுறை அவசியம்

பாடசாலை புதிய தவணை ஆரம்பமாகவுள்ள நிலையில், மாணவர்களை ஏற்றிச் செல்வதற்காக பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கான எரிபொருளைப் பெறுவதற்கு சரியான பொறிமுறையை தேவை என்று அகில இலங்கை பாடசாலை சிறுவர் போக்குவரத்துச் சங்கம் கோரியுள்ளது.

புதிய பாடசாலை தவணை ஜூலை 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள போதிலும் எரிபொருள் கொள்வனவு செய்வதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக சங்கத்தின் செயலாளர் லலித் சந்திரசிறி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## "இன்று மாலை அறிவிப்போம்"

யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று (19) மெய்நிகர் சந்திப்பை நடத்தவுள்ளது என காங்கிரஸின் பொதுச் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## இப்போதாவது ஜனநாயகத்தை வலுப்படுத்துங்கள்

ஆர்.யசி



மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்று அதிகாரத்தை பெற்றுக்கொண்டும், நிறைவேற்று அதிகாரத்தை மேலும் பலப்படுத்தும் 20 ஆம் திருத்தத்தை கொண்டுவந்தும் ஆட்சியாளர்கள் சாதித்தது என்ன? இறுதியாக நாட்டை விட்டு விரட்டியடிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டமையே அரங்கேறியது என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும்,

தொடர்ச்சி P2

## சொத்து விவரங்களை வெளிப்படுத்துங்கள்

### ஜனாதிபதி வேட்பாளர்களிடம் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் கோரிக்கை

நாட்டின் பிரஜைகளுக்கு தமது சொத்துகள், பொறுப்புகள் பற்றிய பிரகடனங்களை பொது வெளியில் பகிரங்கமாக வெளியிட்டு வெளிப்படைத்தன்மை தொடர்பிலான தங்களுடைய அர்ப்பணிப்பை வெளிப்படுத்துமாறு ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுப்பதாக ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் தெரிவித்துள்ளது.

வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் தொடர்பில் அர்ப்பணிப்பு மற்றும் உறுதிப்பாட்டை பொதுமக்கள் மத்தியில் நிரூபிக்க சொத்து மற்றும் பொறுப்புகள் பிரகடனங்களை பொதுவெளியில் வெளியிடுவது ஒரு முக்கிய விடயமாக காணப்படுகிறது.

தொடர்ச்சி P2

## எதிர்பாராத அளவு தாக்கலாம்



புதிய நோய் அடையாளங்களுடன் நாட்டில் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும் புதிய ஒமிக்ரோன் வைரஸ் தொற்றா என்பதை உறுதிப்படுத்தும் பரிசோதனைகள் இன்றுவரை முன்னெடுக்கப்படவில்லை.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மூவருக்கு ரூ. 4.5 கோடி வெளிநாட்டு நிதி

இந்த மூன்று கணக்குகளிலும் வெளிநாடுகளில் இருந்து 45 மில்லியன் ரூபாய் வைப்பிலிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சில மணிநேரங்களுக்குப் பின்னர், வங்கிக்கு வந்ததாகக் கூறப்படும் அவர்கள், முழுத் தொகையையும் மீளப் பெற்றதாகவும், பணத்தைப் பெற்றதற்கான காரணத்தை விசாரித்த வங்கி அதிகாரிகளை மிரட்டியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இன்று வேட்பு மனு: நாளை வாக்கெடுப்பு

பாராளுமன்ற உறுப்பினர்களின் வேட்புமனுக்களை பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்ற செயலாளர் நாயகம் இன்று தெரிவத்தாட்சி அதிகாரியாக செயற்படுவார். ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை தெரிவத்தாட்சி அதிகாரியாக செயல்படும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம், அறிவிக்க வேண்டும். இதனை மற்றொரு பாராளுமன்ற உறுப்பினர் வழிமொழிவார். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதங்களில் ஈடுபட முடியாது.

இன்றைய தினம் ஜனாதிபதி பதவிக்கு ஒருவர் மாத்திரம் வேட்பு மனுவை தாக்கல் செய்திருந்தால், அந்த நபர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். எனினும், ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் நாளைய தினம்(20) ஜனாதிபதி பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் நடைபெறும்.

இதேவேளை ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்காக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் போட்டியிட தீர்மானித்துள்ளனர். மேலும் ஏனைய பாராளுமன்ற அமர்வுகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை விட கூடுதலான பாதுகாப்பு இன்றும், நாளையும் பாராளுமன்றத்துக்கு போடப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்துக்குச் செல்லும் வழிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

## இங்கிலாந்து புலனாய்வு சேவைகளின் உதவியைக் கோருவேன்

அதன் பின்னர் இரண்டு மாதங்களில் மின்சாரம் 3 மணித்தியாலமாக குறைக்கப்பட்டு விவசாயிகளுக்கு உரம் வழங்கப்பட்டு நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு தீர்க்கப்பட்டுள்ளதாக பதில் ஜனாதிபதி விளக்கமளித்துள்ளார்.

ஜூலை மாதம் எரிபொருள் விநியோகத்திற்கு கடினமான காலமாக இருக்கும் என்று அவர் விளக்கினார். எவ்வாறாயினும், டீசல் இருப்புக்கள் பாதுகாக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன, அதே நேரத்தில் ஜூலை 21 முதல் பெற்றோல் விநியோகிக்கப்படும்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நாட்டின் குடிமக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் விளக்கினார். 2 ஏக்கருக்கும் குறைவான வயல்களை பயிரிட்ட நெற்செய்கையாளர்களின் கடன்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக பதில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ள நிலையில், நாட்டிலும் எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துரைத்த பதில் ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) பேச்சுவார்த்தைகள் முடிவடையும் தருவாயில் இருப்பதாகவும், வெளிநாடுகளுடனான உதவிக்கான கலந்துரையாடல்களும் முன்னேறி வருவதாகவும் விளக்கமளித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் முழுமையற்ற தன்மை காரணமாக இங்கிலாந்து அரசாங்கம் மற்றும் அவர்களின் புலனாய்வு சேவைகளின் உதவியை கோருவதாகவும் பதில் ஜனாதிபதி விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையே காரணம் என விளக்கமளித்த அவர், பொதுமக்களின் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் 19 ஆவது திருத்தச் சட்டம் மீண்டும் கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் அமைதியை சீர்குலைக்க முயற்சிக்கும் சக்திகள் சமூகத்திற்குள் இருப்பதாக பதில் ஜனாதிபதி விளக்கமளித்தார். இந்த கூறுகள் நாட்டின் முன்னேற்றத்தை சீர்குலைப்பதில் இருந்து தடை செய்யப்படும் என்று அவர் விளக்கினார். கௌரவ. நியாயமான கவலைகளைக் கொண்ட அமைதியான போராட்டக்காரர்கள் பிரசினைகள் அவர்களுக்கான தீர்வுகள் கண்டுபிடிக்கப்படும் என்று விக்கிரமசிங்க மேலும் கூறினார்.

நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தனிநபரின் கருத்து வேறுபாடுகளால் நாடு பாதிக்கப்படுவதற்கு இடமளிக்க வேண்டாம் என பதில் ஜனாதிபதி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் அனைத்துக் கட்சி ஆட்சியை அமைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## 50 கண்ணீர்புகை குண்டுகளை திருடியவர் சிக்கினார்

பொலன்னறுவை பிரதேசத்தை சேர்ந்த 31 வயதுடைய நபரே ஒபேசேகரபுர பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (17) கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, பொரளை பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து குறித்த குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

ஜூலை 13ஆம் திகதியன்று பாராளுமன்ற சுற்றுவட்ட பகுதியின் பொல்துவ சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸ் உத்தியோகத்தர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்த தாக்குதல் சம்பவத்தின் போது பல கண்ணீர் புகை குண்டுகளும் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

## இலங்கை குறித்து...

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்திலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் பதிவிட்டுள்ளார்.

நாட்டில் வறுமையில் வாடும் மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

"இலங்கை மக்களுக்காக நாம் ஒன்றாகப் பிரார்த்தனை செய்வோம். விசேடமாக ஏழைகளுக்கு ஆதரவாக, அனைவரின் உரிமைகளையும் பறிக்கும் தற்போதைய நெருக்கடிக்கு அமைதியான தீர்வை தேடுமாறு அனைத்து தரப்பினரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## ரணிலே தெரிவானால்...

இந்நிலையில் ஆளுந்தரப்பு உறுப்பினர்களுக்கு இடையிலான முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பின்வரிசை உறுப்பினர்கள் மற்றும் ஒரு சில சிரேஷ்ட தலைவர்கள் கலந்துகொண்ட இந்த சந்திப்பின் போது, பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது அதீத நம்பிக்கை வைத்திருந்த போதிலும் அவர் தம்மை இடை நடுவே கைவிட்டு சென்றுள்ளதாகவும், இப்போது ரணில் மட்டுமே எமக்கான தெரிவாக உள்ளார் எனவும் சுட்டிக்காட்டியுள்ள ஒரு சில உறுப்பினர்கள், ரணில் பதில் ஜனாதிபதியானால் அவர் மூலமாக தினேஷ் குணவர்தனவை பிரதமராக்கி கட்சியையும் அரசாங்கத்தையும் பலப்படுத்த முடியும் என்ற யோசனையையும் முன்வைத்துள்ளனர்.

## துரோகமிழைக்க மாட்டேன்

காலி முகத்திடல் போராட்ட களத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று (18ஆம் திகதி) காலை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

நாளை (20) இடைக்கால ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ள நிலையில், காலிமுகத்திடல் போராட்ட கள பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்து தமது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளனர். இதன் போது காலிமுகத்திடல் போராட்டத்தின் கோரிக்கைகளுக்கு, தானோ, தனது கட்சியோ அல்லது தனது கூட்டணியோ ஒருபோதும் துரோகமிழைக்காது, தானோ அல்லது தனது கட்சியோ அல்லது தனது கூட்டணியோ ஒருபோதும் போராட்டத்தின் கோரிக்கைகளுக்கு துரோகம் செய்யவில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,எதிர்காலத்திலும் அவ்வாறு துரோகமிழைக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்தார்.

## வரிசையில் நிற்காதீர்:...

அதற்கமைய வாகன இலக்கத் தகட்டின் கடைசி இலக்கமான 0, 1 மற்றும் 2 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வாகன உரிமையாளர்கள் மாத்திரம் எதிர்வரும் 21ஆம் திகதி எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

0, 1, 2 இலக்கங்களுக்கு திங்கள், வியாழன் ஆகிய நாட்களும், 3, 4, 5 ஆகிய இறுதி இலக்கங்களுக்கு செவ்வாய், வெள்ளிகிழமைகளும் 6, 7, 8, 9 ஆகிய இறுதி இலக்கங்களுக்கு புதன், சனி, ஞாயிறு ஆகிய தினங்களும் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸாருடன் முறுகல்; நகரசபை உறுப்பினர் கைது

நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக கடந்த நான்கு நாட்களுக்கும் மேலாக இரவு - பகல் பாராது அரச உத்தியோகத்தர்கள் ஒரு வரிசையிலும், பொதுமக்கள் ஒரு வரிசையிலும் காத்திருந்தனர்.

இந்நிலையில், ஐம்பதுக்கும் மேற்பட்ட பொலிஸார், தமக்கான புதிய வரிசையை உருவாக்கி, எரிபொருளை பெறும் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

மேலும், பொலிஸார் தங்களுக்கான எரிபொருளை பெற்ற பின்னரே அரச ஊழியர்கள் பெற முடியுமென தெரிவித்தமையால் அரச ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

அத்துடன், இது தொடர்பாக பொலிஸாரிடம் தட்டிக்கேட்ட நகரபை உறுப்பினர் பாரி மற்றும் அரச உத்தியோகத்தர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டதுடன், இரு பொலிஸாருக்கு; இரு அரச ஊழியர்கள் என்ற ரீதியில் எரிபொருளை வழங்க பொலிஸார் உடன்பட்டதன் பின்னரே, குறித்த குழப்ப நிலை முடிவுக்கு வந்திருந்தது.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகிக்கும் போது பொலிஸார் விசேட முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை பெற்றுச்செல்வதால் தங்களுக்கான எரிபொருளை பெறுவதற்கு பல நாட்களுக்கு மேலாக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## ஓட்டோவுக்கு குறைகிறது...

இதேவேளை, எரிபொருள் விலை திருத்தத்துக்கு அமைவாக கட்டணங்களை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் இரண்டாவது முதல் கிலோ மீற்றருக்கான கட்டணத்தை 100 ரூபாயிலிருந்து 90 ரூபாயாகக் குறைக்கவுள்ளதாக ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்தார்.

டீசல் விலை நான்கு வீதத்தால் திருத்தப்பட்டால், தேசிய கொள்கையின் அடிப்படையில் பஸ் கட்டணத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று அஞ்சன பிரியஞ்சித் குறிப்பிட்டார்.

பஸ்களை இயக்குவதற்கு போதுமான எரிபொருள் கிடைத்தால், கட்டணத்தை குறைக்க தயாராக இருப்பதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் விலை 20 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ள போதிலும், பஸ் கட்டணத்தை குறைப்பது தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உரிய கவனம் செலுத்தவில்லை என அகில இலங்கை பஸ் பயணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

## எரிபொருள் பொறிமுறை...

கியூஆர் முறையை அறிமுகப்படுத்தி எரிபொருள் கொள்வனவு செய்வதற்கான கட்டுப்பாடுகளை எரிசக்தி அமைச்சு விதித்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், புதிய தேசிய எரிபொருள் அனுமதிச்சீட்டு முறைமை இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றார்.

அதற்கமைய வாகனத்தின் இலக்கத்தகட்டின் அடிப்படையில் மட்டுமே உரிமையாளர்கள் எரிபொருளைப் பெற முடியும் என்றும் இந்த முறைமையின் அடிப்படையில் அனைத்து பாடசாலை வாகன உரிமையாளர்களும இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

## எதிர்பாராத அளவு தாக்கலாம்

எரிபொருள் வரிசை, போராட்டங்கள், பேரணிகள் காரணமாக மக்கள் அதிகளவில் கூட்டம் கூடுவதால் புதிய ஓமிக்ரோன் வைரஸ் நாட்டுக்குள் பரவியிருந்தால் அடுத்துவரும் காலங்களில் மிகப்பெரிய நெருக்கடியொன்றை மக்கள் சந்திக்க நேரிடும் என பொது சுகாதார பணியாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளில் புதிய ஓமிக்ரோன் வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கச்செய்துள்ளது. மரண வீதமும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆசிய நாடுகளிலும் புதிய ஓமிக்ரோன் வைரஸ் வேகமாக பரவிக்கொண்டுள்ளது. ஆகவே இலங்கைக்கும் இதனால் அதிக அச்சுறுத்தல் காணப்படுகின்றது. வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் நபர்களுக்கு அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை, எனவே புதிய ஓமிக்ரோன் வைரஸ் நாட்டுக்குள் பரவியுள்ளதா இல்லையா என்பதை எம்மால் உறுதிப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது. புதிய நோய் அடையாளங்களுடன் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும் அதனை உறுதிப்படுத்தும் பரிசோதனைகள் இன்றுவரை முன்னெடுக்கப்படவில்லை. அதற்கான வசதிகளும் இலங்கையில் இல்லை.

எவ்வாறு இருப்பினும் எரிபொருள் வரிசை, போராட்டங்கள், பேரணிகள் காரணமாக மக்கள் அதிகளவில் கூட்டம் கூடுவதை அவதானிக்க முடிகின்றது. அவ்வாறான நிலையில் புதிய ஓமிக்ரோன் வைரஸ் நாட்டுக்குள் காணப்படும் என்றால் அடுத்துவரும் காலங்களில் மிகப்பெரிய நெருக்கடியொன்றை மக்கள் சந்திக்க நேரிடும். நாடு முழுவதும் பரவும்

## வைத்தியசாலைகள் முடங்கும்...

நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை நடத்துபவர்கள் எரிபொருள் விநியோக பொறிமுறையை தவறாக பயன்படுத்துகின்றனர் என்று சங்கத்தின் செயலாளர் டொக்டர் ஹரித அலுத்கே குற்றம் சுமத்தினார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகங்கவியலாளர் மாநாட்டின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

பொரளையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலை, காஸல் வீதி மகளிர் வைத்தியசாலை மற்றும் டி சொய்சா மகப்பேறு வைத்தியசாலை ஆகியவற்றின் ஊழியர்களால் கடமைக்கு பணிக்கு சமூகமளிக்க முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற வைத்தியசாலைகள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் கூட ஈடுபடவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

## சொத்து விபரங்களை வெளிப்படுத்துங்கள்

தூய அரசியலுக்கான பொதுமக்களின் அழைப்புக்கு செவிசாய்த்து நாடு எதிர்பார்க்கும் மாற்றத்தை அடைவோம் எனவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

## இப்போதாவது ஜனநாயகத்தை...

முன்னாள் சபாநாயகருமான கரு ஜெயசூரிய தெரிவித்தார். ஜனநாயகத்தை பலப்படுத்துவதன் மூலமாக மட்டுமே நாட்டின் நெருக்கடியை வெற்றிகொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் சகல மக்களுக்கான ஜனநாயகத்தை பெற்றுக்கொடுத்து, உயரிய ரீதியில் அதனை நடைமுறைப்படுத்தி மீண்டும் 19 ஆம் திருத்தத்தின் மூலமாக நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். சர்வாதிகார போக்கில் பயணிக்கும் நிறைவேற்று அதிகாரத்தை இப்போதாவது நிராகரித்து சகல தரப்பும் ஒன்றிணைய வேண்டிய தருணத்தில் உள்ளோம் எனக் கூறிய அவர், அதன் மூலமாக மட்டுமே சர்வதேசத்தின் ஒத்துழைப்புகளையும், நம்பிக்கையையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

20 ஆம் திருத்தத்தை நிறைவேற்றி முன்னாள் ஜனாதிபதி கண்ட பயன் என்ன? பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொண்டு இவர்களால் என்ன செய்ய முடிந்தது என கேள்வி எழுப்பிய அவர், சர்வாதிகார போக்கின் காரணமாக மக்களின் ஒட்டுமொத்த கோவத்திற்கும் உள்ளாகி இறுதியாக ஆட்சியாளர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழல் உருவாகியுள்ளமை ஆரோக்கியமான அரசியல் நகர்வாக கருதவில்லை எனவும் தெரிவித்தார்.

புதிய ஜனநாயக அரசியல் அமைப்பின் மூலமாகவே தவறுகளை திருத்திக்கொள்ள முடியும், அதனையே சர்வதேசமும் தொடர்ச்சியாக வலியுறுத்திக்கொண்டுள்ளது. ஆட்சியாளர்கள் அதனை விளங்கிக்கொள்ள வேண்டும். 2015-2019 ஆட்சிக் காலத்தில் ஜனநாயகத்தை பலப்படுத்தியதன் காரணமாக சர்வதேச நாடுகளிடம் இருந்து பல நன்மைகளை பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால் அதனை தொடர்ச்சியாக முன்கொண்டு செல்ல முடியவில்லை எனவும் அவர் கூறினார்.

## இன்று மாலை...

நேற்று (18) பதிவிட்டிருந்த டுவிட்டர் பதவில் அவர், பொதுச் செயலாளர் என்ற வகையில், மலையகத்தைச் சேர்ந்த தொழில் வல்லுனர்களும் தங்களின் பாரபட்சமற்ற கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள அனுமதிக்குமாறு செயற்குழுவிடம் கோருவேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதன்பின்னர், ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பில் யாருக்கு ஆதரவு வழங்கவுள்ளோம் என்பது தொடர்பில் இன்று (19) மாலையே அறிவிப்போம் என்றும் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பொது இணக்கப்பாட்டுக்கு வந்தால்

## வேட்புமனுவை மீளப்பெறத் தயார்



சர்வகட்சி அரசாங்கம் ஒன்றினை அமைக்கும் பொது இணக்கப்பாட்டுக்கு சகல கட்சிகளும் வருவார்கள் என்றால், எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல் இல்லாத இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி, பிரதமராக நியமித்தால் ஜனாதிபதி தெரிவுக்கான வேட்புமனுவை மீளப்பெறத் தயார் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பிரதிநிதிகளுடன் முன்னெடுத்த கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல்களின்றி ஜனாதிபதி, பிரதமரை நியமிப்பது தொடர்பாக இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு அனைத்து கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. சில அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் ஒருமித்த கருத்துக்கு வர ஒப்புக்கொண்டாலும் இப்போது அவர்களின் நிலைப்பாடு மாறியுள்ளது. எனவே, எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல்களின்றி ஜனாதிபதியையும் பிரதமரையும் நியமித்து, குறுகிய காலத்திற்கு சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்கி, தேர்தலுக்கு செல்வோம் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அதேபோல், நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார, அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மேற்பார்வையிட அல்லது மத்தியஸ்தம் செய்வதற்கு காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்களை உள்ளடக்கிய ஒரு சபையை நியமிக்கவும் வேண்டும். அவ்வாறான உடன்பாட்டுக்கு வருவதற்கான முயற்சியை, முற்றாகக் கைவிடவில்லை எனத் தெரிவித்த அவர், அவ்வாறான இணக்கப்பாடு எட்டப்பட்டால் இறுதி நேரத்திலும் வேட்புமனுவை மீளப் பெறத் தயார் எனவும் தெரிவித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாவதற்கு முயற்சித்து வருவதாகவும் அவரது நகர்வுகள் தோற்கடிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

பொது இணக்கப்பாட்டுடன் தீர்வுகளை கண்டறிவது

# புதிய ஜனாதிபதியின் முதல் கடமையாக வேண்டும்

எமது நாட்டுக்கு புதிய தலைமையை தெரிவு செய்வதற்கான முக்கியமான தருவாயில் நாம் உள்ளோம். அப்பணியானது மிகவும் கடினமான பொறுப்புடன் மேற்கொள்ள வேண்டிய விடயமாக கருதும் நாம். இந்த செயற்பாடுகளின் போது, அரசியல் அமைப்புக்கு உட்பட்டு அப்பணியை நிறைவேற்ற வேண்டும் என நியாயமான சமூகத்துக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

அதற்கான பொறுப்பு பாராளுமன்றத்துக்கே உள்ளது. அதற்காக இந்த நாட்டின் மக்கள் பிரதிநிதிகள் நாட்டின் எதிர்கால நலனை கருதி, தமக்கு வழங்கப்பட்டு இருக்கும் கடமையை மனசாட்சிக்கு விரோதமின்றியும் ஆக்கபூர்வமாகவும் சிந்தித்து செயற்படுவீர்கள் என எண்ணுகின்றோம் என்றும் அவ்வியக்கம் தெரிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி பொது இணக்கப்பாட்டுடன் தீர்வுகளை கண்டறிவது புதிய ஜனாதிபதியின் முதற் கடமையாக இருக்கவேண்டும் என்றும் அவ்வியக்கம் தெரிவித்துள்ளது.

நாடு முகம் கொடுத்திருக்கும் பாரிய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு வினைதிறன்மிக்கதும் நடைமுறை சாத்தியமான தீர்வு வழங்கப்படவேண்டும். அதனை நிறைவேற்றிக்கொள்வதற்காக நாட்டின் அனைத்து அரசியல் சக்திகளையும் பொது இணக்கப்பட்டுக்கு அமைய ஒன்றுதிரட்டி, குறுகிய காலத்துக்கான சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

தற்போதிருக்கும் அரசியலமைப்புக்கு பதிலாக ஜனநாயக கோட்பாடுகளை பூர்த்தி செய்யும், மக்களின் உரிமைகளை காக்கும், நாட்டின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் விதத்திலான புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் கடமையும் சர்வகட்சி அரசாங்கத்துக்கே இருக்கின்றது. அதற்கான அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொண்டு, நிர்ணயிக்கப்பட்ட கால எல்லையை பூர்த்திச் செய்ததன் பின்னர், புதிய அரசாங்கத்தை உருவாக்கிக்கொள்வதும் சுதந்திரமான முறையில் தேர்தலை நடத்துவதும் மக்களின் நிலைப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு வெகுசன வாக்கெடுப்பை நடத்துவதும் முக்கியமானது என்றும் அவ்வியக்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாட்டலிக்கு எதிரான வழக்கு

## ஒகஸ்ட் 31இல் அடிப்படை ஆட்சேபனை

இராஜகிரியவில் இடம்பெற்ற வாகன விபத்து குறித்து பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உட்பட மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், எழுத்துமூல அடிப்படை ஆட்சேபனைகளை ஒகஸ்ட் 31 ஆம் திகதி தாக்கல் செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்ல, நேற்று (18) உத்தரவிட்டார்.

2016ஆம் ஆண்டு இராஜகிரியவில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க, அவரது சாரதி மற்றும் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொய்யான சாட்சியங்களை சோடனை செய்தமை, சதி செய்தமை, பொய்யான அறிக்கைகளை சமர்ப்பித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், முன்னாள் அமைச்சர் சம்பிக்க மற்றும் பிரதிவாதிகள் இருவருக்கு எதிராக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றையதினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தனது சேவை பெறுநருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் தொடர்ச்சியை, சவாலுக்கு உட்படுத்தும் அடிப்படை ஆட்சேபனை விரைவில் தாக்கல் செய்யப்படும் என பாட்டலி எம்.பி சார்பில் ஆஜரான சட்டத்தரணி சரத் ஜயமான்ன, கொழும்பு மேல் நீதிமன்றில் தெரிவித்தார்.

வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக அடிப்படை ஆட்சேபனைகள் தாக்கல் செய்யப்படும் என மன்றில் அறிவித்தார்.

எதிர்வரும் ஒகஸ்ட் 31 ஆம் திகதி எழுத்துமூல அடிப்படை ஆட்சேபனைகளை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்ட நீதிபதி, நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, பிரதிவாதி அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜராக வேண்டிய அவசியமில்லை என அறிவித்தார்.

ஆறு மாதங்களுக்குள்

## சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும்

தலைவர்களின் சுயநலம், பகுத்தறிவற்ற முடிவுகளால், நாட்டை அரசியல் நெருக்கடிக்கு இட்டுச் செல்வதால், கடந்த ஆறு மாதங்களாக இலங்கை வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அரசியல் தலைமைகள் இந்த நிலைமையை விவேகத்துடனும் தொலைநோக்குடனும் கையாண்டு, நிலையான ஆட்சி முறையுடன் இந்தப் பொருளாதார முட்டுக்கட்டையில் இருந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என மார்ச் 12 அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போதைய தேசிய நெருக்கடிகளுக்கு பங்களித்த அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் முந்தைய குறைபாடுள்ள அனுபவங்களை கவனத்தில் கொண்டு, 21 ஆவது திருத்தத்தில் தொடங்கி, நாட்டிற்கான புதிய அரசியலமைப்பு ஜனநாயகத்தின் கொள்கைகள் மற்றும் அடிப்படை அம்சங்களை கூட்டாக அடையாளம் காண பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல்களை நடத்துதல் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பை ஆறு மாதங்களுக்குள் நடத்துதல் எனவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் ஊழல் மற்றும் தவறான செயல்களால் கறைபடாத தூய்மையான மற்றும் வெளிப்படையான அரசாங்கத்தை மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே பாராளுமன்றத்தில் உள்ள கட்சித் தலைவர்கள், ஜனாதிபதி மற்றும் பிரதமரை ஒருமித்த கருத்துடன் தேர்ந்தெடுப்பதுடன், 15 நபர்களுக்கு கூடாத அமைச்சரவையை நியமிக்க வேண்டும். போராட்டக்காரர்களை, துறைசார் ஆலோசனைக் குழுக்களிலும், தேசிய கொள்கை கவுன்சிலிலும் சேர்க்க வேண்டிய அவசியம் உள்ளது. அத்துடன் அவர்களின் யோசனைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஊழலற்ற பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்தல், அனைத்து இலங்கையர்களின் சுமையைத் தளர்த்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் பிரிவினருக்கு முன்னுரிமை அளித்தல் அவசியம். அத்துடன் ஐ.எம்.எப் மற்றும் உரிய சர்வதேச தரப்புடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

## ரஞ்சனுக்கு பொதுமன்னிப்பு நெருங்கி வருகின்றது



சிறைவாசம் அனுபவித்துவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை விடுவிக்கக்கோரி கலைஞர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சிலர் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், ரஞ்சனை விடுதலை செய்வதற்கான நகர்வுகளை ரணில் முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்வதற்கு தேவையான ஆவணங்களை தயாரித்து, சட்டமா அதிபர் மற்றும் பிரதம நீதியரசரிடம் ஒப்படைக்குமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளதாகவும், மிக விரைவில் ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்பட வாய்ப்புகள் இருப்பதாகவும் சமூக செயற்பாட்டாளர்கள் மூலமாக தெரிய வருகின்றது.

## "எங்களுக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கை"

வடக்கு, கிழக்கில் சட்டவிரோதமான முறையில் இடம்பெறும் பல்வேறு விடயங்களுக்கு நாம் கடுமையான முறையில் எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றோம். குறிப்பாக குருந்தூர் மலையில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள விஹாரை தொடர்பிலும் நடவடிக்கை எடுத்துள்ளோம். எனவே எங்களுக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கையை முன்னெடுக்கின்றனர் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் குருந்தூர் மலையில் விகாரை கட்டுவதற்கு பாரிய தடையாக இருப்பதாக தேரர் ஒருவர் விசனம் தெரிவிக்கும் காணொளி இணையத்தில் பகிரப்பட்டு வருகின்றது.

குறித்த காணொளியில், "தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு, விடுதலை புலிகள் அமைப்பின் கொள்கையை அடிப்படையாக கொண்டுள்ளது. வடக்கில் சிங்களவர்கள் இருக்க கூடாது; அவர்களுக்கு உரிமையில்லை என்றே இவர்கள் குறிப்பிடுகிறார்கள். போராட்டகாரர்களுடன் சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் பேச்சுவார்த்தையை மேற்கொண்டுள்ளார்கள். நாட்டை முன்னேற்றவும், ஊழல் மோசடியை ஒழிக்க வேண்டும் எனவும் மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகிறார்கள். மனிதாபிமானத்துடன் கருத்துரைக்கும் நபர்கள் வடக்கில் உள்ள தொல்பொருள் சின்னங்களை பாதுகாக்க அவதானம் செலுத்தவில்லை. வடக்கில் தொல்பொருள் சின்னங்கள் அபிவிருத்தி செய்தால் வடக்கு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையும். இதற்கு ஏன் தமிழ் தலைமைகள் ஒத்துழைப்பு வழங்குவதில்லை. தெற்கில் ஒரு நாடு - ஒரு சட்டம் தொடர்பில் கருத்துரைக்கிறார்கள், வடக்கில் தனி ஈழம் தொடர்பில் கருத்துரைத்து பிரச்சினைகளை தோற்றுவிக்கிறார்கள்" என அந்தத் தேரர் தெரிவித்திருந்தார்.

இது குறித்து இரா. சாணக்கியன் எம்.பி தெரிவிக்கையில், "நாங்கள் இருவரும் வடக்கு, கிழக்கில் சட்டவிரோதமான முறையில் இடம்பெறும் பல்வேறு விடயங்களுக்கு கடுமையான முறையில் எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றோம். குறிப்பாக, குருந்தூர் மலையில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பிலும் நடவடிக்கை எடுத்துள்ளோம். எனவேதான் எங்களுக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கையினை இந்த தேரர் முன்னெடுத்துள்ளார். தற்போது இலங்கையில் அனைத்து இனங்களும் ஒற்றுமையாக ஒருமித்து பயணிக்கும் நிலையில் இவ்வாறான சிலரின் செயற்பாடுகளால் இன நல்லிணக்கம் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே இவ்வாறான இனவாதிகளின் செயற்பாடுகளுக்கு நாம் தடைகளை ஏற்படுத்துகின்றோம்" என அவர் தெரிவித்தார்.

## "எங்களுக்கே தகுதி இருக்கிறது"

பா.நிரோஸ்




கட்சி பேதங்களுக்கு அப்பால் நாட்டு மக்களின் குரலுக்கு செவி சாய்த்து, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி தேர்தலில் வெற்றியடைய செய்ய வேண்டும் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல, பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்,

நாட்டில் எரிபொருளுக்காக நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருக்கிறார்கள். அதேபோல் வாழ்க்கைச் செலவும் பாரிய அளவில் அதிகரித்து வருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியானது குறுகிய காலத்தில் ஆரம்பித்து 54 பாராளுமன்ற உறுப்பினர்களை வென்றெடுத்த கட்சியாகும். அதுமட்டுமல்ல ராஜபக்ஷர்களின் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட நாட்டுக்கு எதிரான தீர்மானங்களை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் எதிர்த்து வந்ததாகவும் எனவே ஐக்கிய மக்கள் சக்தியை குறைத்து மதிப்பிட வேண்டாம் எனவும் தெரிவித்துள்ள அவர், அரசாங்கத்தை அமைக்கும் தகுதி ஐக்கிய மக்கள் சக்தியிடமே இருப்பதாகவும் தெரிவித்தார்.

2 மில்லியன் லீற்றர் எரிபொருள்

## ஐ.ஓ.சி விடுவித்தது

நாடளாவிய ரீதியில் எரிபொருளை விநியோகிக்கும் நோக்கில் திருகோணமலை முனையத்திலிருந்து இரண்டு மில்லியன் லீற்றர் எரிபொருள் விடுவிக்கப்பட்டுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் அறிவித்துள்ளது. அதற்கமைய 125 பௌசர்களில் நாடு முழுவதும் உள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும் என ஐ.ஓ.சி நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மனோஜ் குப்தா தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அதேபோல், நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன. இதன்படி லீற்றிருக்கு புதிய விலையாக, பெற்றோல் 92 ஒக்டேன் - ரூ. 450/-, பெற்றோல் 95 ஒக்டேன் - ரூ. 540/-, டீசல் - ரூ. 440/-, சுப்பர் டீசல் - ரூ. 510/- என்ற விலை பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், 92 ஒக்ரேன் பெற்றோல் மற்றும் ஓட்டோ டீசலை இம்மாதம் 21ஆம் திகதி முதல் தொடர்ந்து விநியோகம் செய்ய இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதுவரையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் பொதுமக்கள் காத்திருக்க வேண்டாம் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 'அரகலய' குழுவினருடன் ரிஷாட் சந்தித்துப் பேச்சு



காலி முகத்திடல் 'அரகலய' போராட்டக் குழுவினரின் பிரதிநிதிகள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்களை கட்சி அலுவலகத்தில் நேற்று (18) சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, எதிர்வரும் புதன்கிழமை (20) புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வது தொடர்பில், 'அரகலய' பிரதிநிதிகள் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

அரசியல், சமூக, பொருளாதார விடயங்களில் தமது கருத்துகளையும், தாம் கொண்டிருக்கும் திட்டங்களையும் வெளிப்படுத்தியதோடு, அது தொடர்பான ஆவணத்தையும் கையளித்தனர். அரசியல் கட்சிகளுடன் 'அரகலய' போராட்டக் குழுவினர் தொடர்ச்சியாக நடத்தி வரும் பேச்சுவார்த்தையின் ஒரு கட்டமாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

## அடிமை மனநிலையில் எம்.பிக்கள்

பா.நிரோஸ்




பாராளுமன்றத்தில் நாளை நடைபெறவுள்ள இடைக்கால ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பின்போது, பதில் ஜனாதிபதி ரணிலுக்கு வாக்களிப்பது பாவச்செயல் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்துள்ளார். ராஜபக்ஷர்கள் கூறும் ஒருவருக்கு வாக்களிக்கும் அடிமை மனநிலையே எம்.பிக்களிடம் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 69 இலட்ச வாக்குகளை பெற்று வெற்றிபெற்றார். இதற்கு அடுத்தபடியாக சுமார் 56 இலட்சம் வாக்குகளை பெற்று சஜித் பிரேமதாஸ தோல்வி அடைந்தார். இவ்வாறான நிலையில் கோட்டா பதவி விலகி இருக்கிறார். எனவே அடுத்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கான தகுதி சஜித்துக்கே இருக்கிறது.

பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற முடியாத பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பின்கதவு வழியாக பாராளுமன்றத்துக்கு வந்து பிரதமராகி, தற்போது பதில் ஜனாதிபதியாகவும் செயற்பட்டு வருகிறார். இது ஜனநாயகத்தை நகைப்புக்குள்ளாக்கும் செயலாகும்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்படுவதையே ராஜபக்ஷர்கள் விரும்புகிறார்கள். அவ்வாறு அதிகாரத்துக்கு வந்தால் ரணிலால் ராஜபக்ஷர்களை பாதுகாக்க முடியும். அவர்களுக்கு எதிரான வழக்குகளில் இருந்து அவர்களை விடுவிக்க முடியும். நாட்டை விட்டு பாதுகாப்பாக வெளியேறுவதற்கு ராஜபக்ஷர்களுக்கு ரணில் உதவி செய்வார். ராஜபக்ஷர்களுக்கு மட்டுமல்லாது ராஜபக்ஷர்கள் கூறும் எவருக்கும் வாக்களிக்க கூடிய அடிமை மனநிலை பாராளுமன்றத்தில் உள்ள எம்.பிக்களுக்கு இருக்கின்றது. ரணிலுக்கு வாக்களித்துவிட்டு ஊருக்கு வர வேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் எச்சரித்துள்ளனர். எனவே ரணிலுக்கு வாக்களிப்பது பாவச்செயல் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடுவதே

# காலத்தின் தேவை

■ பாறுக் ஷிஹான்

தமிழ் மக்களின் இருப்பையும் உரிமை சார்ந்த விடயங்களையும் பாதுகாக்கின்ற செயற்பாட்டில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஈடுபடவேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் புதிய ஜனாதிபதி தெரிவு தொடர்பாக, ஆலையடிவேம்பு பகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "புதியதொரு ஜனாதிபதி, அனைத்து பாராளுமன்ற பிரதிநிதிகளினாலும் தெரிவு செய்யப்படவிருக்கின்றார். தமிழ் பரப்பில் இருக்கின்ற தமிழ்த் தேசியத்தின் பால் ஈர்க்கப்பட்ட கட்சிகள், தமிழர் நலன் சார்ந்து செயற்படுகின்ற தமிழ்த் தேசிய பரப்புக்கு அப்பால் இருக்கின்ற மலையக கட்சிகள், என்ன செய்யப்போகின்றார்கள் என்பது முக்கியமானதாக இருக்கின்றது.

"வடக்கு, கிழக்கு மாகாணத்தில்



தமிழ் மக்களுக்கு அதிகளவான பிரச்சினைகள் காணப்படுகின்றன. புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினை மட்டுமல்லாமல், ஏனைய இறைமை சார்ந்த பிரச்சினைகள், இனம் சார்ந்த பிரச்சினைகள் கூடுதலாக காணப்படுகின்றன.

"விசேடமாக அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற தமிழர்களின் நலன் சார்ந்த விடயங்கள், முன்வைக்கப்படுகின்ற கோரிக்கையானது உள்ளடக்கப்படவேண்டிய முக்கியமான ஒன்றாகியுள்ளது. வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் மிக முக்கியமானது அம்பாறை மாவட்டமாகும்.

"அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழர்களின் இருப்பு, தற்போது கேள்விக்குறியாக மாறியுள்ளது. அவர்களின் உரிமை சார்ந்த விடயங்கள், இனம் சார்ந்த விடயங்கள், மதம் சார்ந்த விடயங்கள், இருப்பு சார்ந்த விடயங்கள் என்பன தற்போது கேள்விக்குறியாகி உள்ளது.

"அம்பாறை மாவட்டத்தின் மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பது, கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உரிமை மறுக்கப்பட்டிருக்கின்றது.

"இரண்டாது, தொல்லியல் மற்றும் வன இலாக்காவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விடயங்கள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். தொல்லியல் என்ற போர்வையில், விகாரைகள் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைள், தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்ற நிலைமைகள் நிறுத்தப்பட வேண்டும்.இவ்வாறான விடயங்கள் அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற முக்கியமான பிரச்சினைகளாகும்.

"அந்த வகையில், புதிய ஜனாதிபதி வேட்பாளர்களிடையே தமிழ் தேசிய கட்சிகள் இவ்வாறான விடயங்களை வேண்டுகோளாக முன்வைப்பது அவசியமாகும்" என்றார்.

அறநெறி மாணவர்களுக்கு

## டிஜிட்டல் பேச்சு போட்டி

■ சகா

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 75ஆவது மகா சமாதி நினைவை முன்னிட்டு, இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே டிஜிட்டல் முறையிலான பேச்சு போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணி மன்றம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர்கள், மாணவர்களின் பேச்சு நிகழ்வுகளை ஒலிப்பதிவுசெய்து, 0776569156 எனும் வாட்ஸ்அப் இலக்கத்துக்கு, எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும்.

பேச்சுக்கான தலைப்புகள்



பின்வருமாறு.

பாலர் பிரிவு - 'முத்தமிழ்த் தாத்தா விபுலாநந்தர்' (இரண்டு நிமிடங்களுக்கு உட்பட்டது.)

கீழ்ப்பிரிவு - 'விபுலாநந்தர் நமக்காக ஆற்றிய அரும்பணிகள்' (மூன்று நிமிடங்களுக்கு உட்பட்டது.)

மத்திய பிரிவு - 'விபுலாநந்த அடிகள் தமிழ் அன்னையின் செல்லப்பிள்ளை' (நான்கு நிமிடங்களுக்கு உட்பட்டது.)

மேற்பிரிவு - 'முத்தமிழால் நமக்குப் பெருமை சேர்த்தவர் விபுலாநந்த அடிகளார்' (ஐந்து நிமிடங்களுக்கு உட்பட்டது.)

மேலதிக தகவல்களுக்கு கு.ஜெயராஜி 0779309257 என்பவரை தொடர்புகொள்ளவும்.



நாவற்குடாவில்

## ஆணின் சடலம் மீட்பு

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா பொதுச் சந்தைக்கு அருகில் நேற்று (18) சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஏ.எஸ். றஹீம் தெரிவித்தார்.

கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியில், நாவற்குடா இந்து கலாசார நிலையத்துக்கு முன்னால் பொதுச் சந்தைக்கு அருகில் மீட்கப்பட்ட இந்த ஆணின் சடலம், இதுவரை அடையாளம் காணப்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டு. சிரேஷ்ட

## பொலிஸ் அத்தியட்சகர் கடமையை பொறுப்பேற்றார்

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாவட்ட புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக ஜ.பி. ரி.சுகதபாலஶ்ரீ, தனது கடமைகளை நேற்று முன்தினம் (17) பொறுப்பேற்றுக் கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றி வந்த சுகத் மாசிங்க, காலி மாவட்டத்துக்கு இடமாற்றம்



பெற்றுச் சென்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, அநுராதபுர மாவட்டத்தில் கடமையாற்றிவந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜ.பி. ரி. சுகதபாலஶ்ரீ, பொலிஸ் மா அதிபரால் நியமிக்கப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன்


## காட்டு யானையின் உடலம் மீட்பு

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு - பதுளை வீதியை அண்டியுள்ள உன்னிச்சை பல்லாவிக் குளத்துக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 20 வயது மதிக்கத்தக்க காட்டு யானையின் உடலம் மீட்கப்பட்டதாக, ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வருடத்தில் முதல் முறையாக துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்த காட்டு யானை இது என வன இலாகா அதிகாரிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு



வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட சுற்றுவட்டப் பொறுப்பாளர் ஏ. அப்துல் ஹலீம் தலைமையில் யானையின் சடலத்தை, சனிக்கிழமை மாலை மீட்டெடுத்தனர். இது சம்பந்தமான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதேச சபையின்

## முன்னாள் தவிசாளர் காலமானார்

■ வடமலை ராஜ்குமார், எப்.முபாரக்

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் இராமலிங்கம் விஜேந்திரன், தனது 77ஆவது வயதில் நேற்று (18) காலமானார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக தேர்தலில் போட்டியிட்டு, 2011 தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை திருகோணமலை பட்டணமும் சூழலும் (உப்புவெளி) பிரதேச சபையின் தலைவராக பதவி வகித்த அவர், ஓய்வுநிலை ஆசிரியராவார்.

அன்னார் உடல் நலக்குறைவால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், நேற்றுக் காலை 08 மணியளவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள், திருகோணமலை, செல்வநாயகபுரத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (19) மாலை 04 மணிக்கு இடம்பெற்று, அலஸ்தோட்டம் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படவுள்ளது.




பதிவு செய்யப்படாத அமைப்பால்


# விவசாயிகளின் பணம் அறவீடு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சியில் கம நல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தால் பதிவுக்கு உட்படுத்தப்படாத அமைப்பு, விவசாயிகளிடமிருந்து பணம் அறவீடு செய்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இரணைமடு குளத்தின் கீழுள்ள கமக்கார அமைப்புகளைக் கொண்டு செயற்படும் இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனம், இதுவரை காலமும் கம நல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தால் பதிவுக்கு உட்படுத்தப்படாத அமைப்பொன்றாகவே செயற்பட்டு வருவதாக திணைக்களத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களில் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவு செய்யாது, விவசாயிகளிடமிருந்து பெருந்தொகையான நிதியை அறவிட்டிருப்பது, 2000ஆம்



இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க. கமநல அபிவிருத்திச் சட்டம்

ஆண்டின் 46ஆம் இலக்க கட்டளை சட்டத்தின் 40ஆம் பிரிவுக்கு எதிராக செயற்பாடாகும்.

மேலும், விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட பணம் வங்கிகளில் வைப்பிலிடப்படாது, நேரடியாக கையாளப்பட்டதாகவே இரணைமடுக் குளத்தின்



DEPARTMENT OF AGRARIAN DEVELOPMENT- KILINOCHCHI

கீழான கமக்கார அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

இவ்வாறு பதிவு செய்யப்படாத அமைப்பு, நிதியைக் கையாண்டிருப்பது தொடர்பில் மாவட்டத்தின் அரச அதிகாரிகள் மௌனமாக இருந்தார்களா? அல்லது உடந்தையாக இருந்தார்களா என்ற கேள்விகளை எழுப்பியுள்ளது.

## கரடி தாக்கியதில் ஒருவர் படுகாயம்


■ க.அகரன்

வவுனியா, புளியங்குளம் காட்டுப்பகுதியில் கரடியின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் இளைஞன், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த நடராசா தர்மராசா (வயது 33) என்ற இளைஞனே கரடியின் தாக்குதலுக்கு இலக்கி படுகாயமடைந்துள்ளார்.

தேன் எடுப்பதற்காக எட்டுபேர் கொண்ட குழு, புளியங்குளம், கச்சக்கொடி பகுதியில் உள்ள காட்டுப்பகுதிக்கு நேற்று முன்தினம் (17) மதியம் சென்ற வேளையிலேயே கரடியின் தாக்குதலுக்கு இலக்காகி, இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து ஏனையவர்களால் இளைஞன் அப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டு, புளியங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.



காணாமல் போன மூன்று

## மீனவர்களில் இருவர் மீட்பு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

தலைமன்னார், பியர் கடற்கரை பகுதியில் இருந்து மீன் பிடிக்க கடலுக்கு சென்ற 3 மீனவர்கள் காணாமல் போயுள்ள நிலையில், அவர்களில் இரு மீனவர்கள் கடற்படையினரால் மீட்கப்பட்டனர். மேலும் ஒரு மீனவர் காணாமல் போயுள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி தலைமன்னார், பியர் மீன்பிடி துறையில் இருந்து கண்ணாடி இழைப்படகில் மூன்று மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குச் சென்றுள்ளனர். இதன்போது பலத்த காற்றுக் காரணமாக, கடல் சீற்றத்தால் படகு கவிழ்ந்துள்ளது.

இதன்போது, குறித்த மீனவர்கள் மூவரும் கடலில் வீழ்ந்து தத்தளித்துக் கொண்டு இருந்த போது, நீரில் மூழ்கிய படகைப் பிடித்தவாறு நீண்ட நேரம் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், சனிக்கிழமை (16) மாலை மீன்பிடி தொழிலுக்காக வந்திருந்த இந்திய இழுவைப் படகின் உதவியுடன் இரண்டு மீனவர்கள் காப்பாற்றப்பட்டு, கச்சதீவு கடற்கரையை அண்மித்த தூரத்தில் இறக்கி விடப்பட்ட நிலையில், கச்சதீவு கடற்படை தளத்தில் குறித்த மீனவர்கள் தஞ்சமடைந்தனர்.

குறித்த இரு மீனவர்களையும் மீட்ட கடற்படையினர் சிகிச்சை வழங்கிய நிலையில், சக மீனவர்களிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் கிழக்கு கேபிள் ஹவுஸ் பகுதியை சேர்ந்த ராஜி ஜெனாத் (வயது 27), ராஜ மூர்த்தி மோகன்ராஜ் (வயது 50) ஆகியோர் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும், அதே பகுதியை வதிவிடமாக கொண்ட ராசதுரை ராஜசேகர் (வயது 52) என்ற மீனவர் காணாமல் போயுள்ளார்.



இளவாலையில்

## முகமூடி கொள்ளை; இருவர் கைது

■ எம்.றொசாந்த்

பண்டத்தரிப்பு பற்றிமா தேவாலயத்துக்கு அருகில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் (17) அதிகாலை புகுந்து, கொள்ளையில் ஈடுபட்ட முகமூடி கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கொள்ளையர்கள், வீட்டாரை கத்தி முனையில் மிரட்டி, அவர்களிடம் இருந்து 20 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் , விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், 20, 21 வயதுடைய இளைஞர்கள் இருவரை கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும், மேலதிக விசாரணைகளை அவர்களிடம் முன்னெடுத்து வருவதாகவும் இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

மகப்பேற்றின் பின்னர்

## போக்குவரத்து வசதி வேண்டும்

■ நடராஜா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு, மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் இருந்து மகப்பேற்றுக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படும், பெண்கள் மகப்பேறின் பின்னர், மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு திரும்பிச் செல்வதற்கான வசதியை, முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக மாங்குளம் வைத்தியசாலைக்கு மகப்பேற்றுக்காக செல்லும் பெண்கள் வைத்தியசாலையின் அம்பூலன்ஸ் மூலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்படுவர்.

மகப்பேற்றின் பின்னர் பெண்கள் கைக் குழந்தைகளுடன் ஓட்டோவிலோ அல்லது பஸ்ஸிலோ பயணிக்க முடியும். ஆனால், தற்போது கிளிநொச்சியில் இருந்து ஓட்டோவில் பயணிக்க



முடியாதளவுக்கு பெருமளவு பணம் தேவைப்படுகின்றது.

பஸ்களில் பயணிகள் நெருக்கமாகக் காணப்படுவதால் மகப்பேற்றை நிறைவு செய்த பெண்கள், சிசுவுடன் பஸ்களில் பயணிக்க முடியாதுள்ளது.

இந்நிலையில், மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் இருந்து அடிக்கடி கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் செல்லும் அம்பூலன்ஸ் மூலம் மகப்பேற்றை நிறைவு செய்த பெண்களையும் சிசுக்களையும் மாங்குளம் வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கையை முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

# மக்களின் எண்ணமே எனது எண்ணமாகும்



நிலமேகம் பிரசாந்த்

பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தெரிவு தொடர்பான எனது முடிவில் எவ்வித மாற்றமும் கிடையாது. நான் முடிவெடுத்தது எடுத்ததுதான். அதில் பின்வாங்கப்போவதில்லை என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலையக மக்கள் பிரதிநிதி என்ற வகையில் மக்களோடு மக்களாக களத்தில் இருப்பவன் நான். மக்களின் எண்ணமே எனது எண்ணம். இந்நிலையில் ஜனாதிபதி தெரிவில் எனது ஆதரவு சஜித் பிரேமதாஸவுக்குத்தான். அதில் எவ்வித மாற்றமும் கிடையாது. மக்களின் எண்ணங்களும் தற்போது அவ்வாறே காணப்படுகின்றது.

இருந்தாலும் ஜனாதிபதி தெரிவில் வாக்களிக்கும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து, ஒருவரைத் தெரிவு செய்தாலும் அதை நான் வரவேற்பேன். அவ்வாறான சந்தர்ப்பம் கிடைத்தால், நானும் ஆதரவளிப்பேன் எனவும் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.



## 'கோட்டா கோ கம' 100 ஆவது நாள் நிகழ்வு

செ.தி. பெருமாள்

'கோட்டா கோ கம'வின் 100 ஆவது நிறைவு நாள் நிகழ்வாக, ஹட்டனில் நேற்று முன்தினம் (17) கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

மெதடிஸ்ட் தேவாலய மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், ஹட்டன் 'கோட்டா கோ கம' செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்வித்துறையை சார்ந்தவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டனர்.

## மீண்டும் அடுப்பு வெடித்தது

ராமு தனராஜா

பதுளை, பாலாகம பகுதியில் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

பெண் ஒருவர் வீட்டில் சமைத்துக்கொண்டிருந்த போதே, இச்சம்பவம் நேற்று முன்தினம் (17) இடம்பெற்றுள்ளது என பதுளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெடிப்பு இடம்பெற்ற வேளை, எவருக்கும் எவ்வித சேதமும் ஏற்படாத போதிலும் அடுப்பு சேமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



### கினிகத்தேனையில்

## 'போராட்ட கம' அமைக்கப்பட்டது

இரா.யோகேசன்

74 வருட கால சாபத்திற்கு விடை தருமாறு கோரியும் ரணில் பதவி விலக வேண்டுமென வலியுத்தியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கினிகத்தேனை பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக 'போராட்ட கம' அமைக்கப்பட்டு, இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்தோடு, '74 வருட சாபத்துக்கு முடிவு கட்டுவோம்','புதிய மக்கள் கருத்துக்கு இடமளி' போன்ற வாசங்கள் எழுதப்பட்ட பதைகைகள் அவ்விடத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.



### காற்றில் பறந்த கூரை:

## பயணிகள் அசௌகரியம்

என்.ஆராச்சி

மாவனெல்ல பஸ் தரிப்பிடத்தின் கூரை, காற்றில் அள்ளுண்டுச் சென்றதால் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் கடுமையான மழை, வெயில் காலங்களில் பயணிகள் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்தப் பஸ் தரிப்பிடத்தின் கூரை, காற்றில் பறந்து பல மாதங்கள் ஆன நிலையில், அதனை புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே, இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகள் அவதானம் செலுத்த வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.







## 100 குடும்பங்களுக்கு உதவி

இந்திய வள்ளலார் கருணைக் குழுவின் நிதி அனுசரணையில், ஹட்டன் அசோகாஸ் சேகரனின் ஏற்பாட்டில், கொட்டகலை வீ ஆசிரியர் ஒன்றியத்தால் தெரிவு செய்யப்பட்ட 100 வறிய குடும்பங்களுக்கு, கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் வைத்து, உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

(பி. கேதீஸ்)

## இன்று நுவரெலியாவிலும் ஆர்ப்பாட்டம்

ஆ.ரமேஸ்

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி, ஆர்பாட்டம் நுவரெலியா நகரில், இன்று (19) காலை முன்னெடுக்கப்படவுள்ளது.

பொது தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இணைந்து இந்த ஆர்பாட்டத்தை நடத்தவுள்ளனர்.

ஆர்ப்பாட்டமானது, நுவரெலியா நகர மத்திய தபால் அலுவலகத்திற்கு முன்பாக நடத்தப்படவுள்ளது.

### புத்தள விபத்தில்

## கர்ப்பிணி மனைவியும் கணவனும் பலி

சுமணசிறி குணதிலக

வெல்லவாய-மொனராகலை வீதியின் புத்தள, குடாஓயா சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற விபத்தில் கணவனும் நிறைமாத கர்ப்பிணியான மனைவியும் பலியாகினர்.

புத்தள, குடாஓயா பகுதியைச் சேர்ந்த 42 வயதான நாலக மதுரங்க, அவரது மனைவி 35 வயதுடைய திலானி தர்மரத்ன ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

குறித்த இருவரும் புத்தள நகரிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் புரிந்து வருவதுடன், சம்பவ தினத்தன்று தமது வீட்டுக்கு நடந்து சென்றுள்ளனர்.

இதன்போது புத்தளயிலிருந்து வெல்லவாய நோக்கி பயணித்த வான், இவர்கள் மீது மோதியுள்ளது.

இதன்போது காயமடைந்த இருவரும் புத்தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, உயிரிழந்துள்ளதுடன் தாயின் வயிற்றில் இருந்த குழந்தையும் உயிரிழந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

பின்னர் மறைத்து வைக்கப்பட்டிருந்த வான் கைப்பற்றப்பட்டதுடன், வானின் சாரதியான ஓய்வுப்பெற்ற இராணுவ வீரரும் கைதுசெய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை, புத்தள பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### கண்டியில்

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

மொஹொமட் ஆஸிக்

கண்டி மாவட்டத்தில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருவதால் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்று மத்திய மாகாண சுகாதார திணைக்களம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது இடைக்கிடையே பெய்து வரும் மழை காரணமாக, டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. ஆகையால், இயன்ற அளவு தமது சுற்றாடலை துப்புரவு செய்து, நுளம்புகளை இல்லாமலாக்க வேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி தொடக்கம் இதுவரையில் கண்டி மாவட்டத்தில் 2,066 டெங்கு நோயாளர்கள் அடையாயம் காணப்பட்டுள்ளனர். ஜனவரி மாதத்தில் 310 நோயாளர்களும் பெப்ரவரியில் 113 நோயாளர்கள், மார்ச்சில் 102 நோயாளர்கள், ஏப்ரலில் 157 நோயாளர்கள், மேயில் 326 நோயாளர்கள், ஜூனில் 646 நோயாளர்கள், ஜூலையில் இதுவரை 412 நோயாளர்கள் பதிவாகி உள்ளனர் என்றும் சுகாதார பிரிவினர் தெரிவிக்கின்றனர் .

## வருமானத்தையே விஞ்சும் கட்டணங்கள்

காமினி பண்டார

பஸ் கட்டணங்கள் பல மடங்குகளாக அதிகரித்துள்ளமையால் தாம் பல சிக்கல்களை எதிர்நோக்குவதாக மலையக பெருந்தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமது வருமானத்துக்கு மேலதிகமாக கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புதல், தொழில்களுக்குச் செல்லுதல் உள்ளிட்ட பல அடிப்படை விடயங்களை பூர்த்தி செய்ய முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

கட்டணங்கள் அதிகரிப்பால் பஸ் பயணங்களை தவிர்த்து, பல கிலோ மீற்றர் தூரத்தையும் நடந்து சென்று தமது தேவைகளை நிறைவேற்றுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

## மாத்தளையில் தொல்பொருள் அலுவலகம்

### திறந்து வைக்கப்பட்டது


மஹேஸ் கீர்த்தரத்ன

163ஆவது தேசிய தொல்பொருள் தினத்துக்கு அமைவாக, மாத்தளை மாவட்டத்தில் தொல்பொருள் அலுவலகம், திறந்து வைக்கப்பட்டது.

மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன தலைமையில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

வரலாற்று, தொல்பொருள் மிக்க இடங்களை கொண்டுள்ள மாத்தளை மாவட்டத்தில் தொல்பொருள் அலுவலகத்துக்கான தேவை பல வருடங்களாக காணப்பட்ட நிலையில், அதனை மாவட்ட செயலக வளாகத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாத்தளையில் தொல்பொருள் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதோடு, மத்திய மாகாணம் முழுவதும் தொல்பொருள் தினத்தை நினைவு கூரும் விசேட வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



### கேகாலை மாவட்டத்துக்கு

## 314 மெட்றிக் தொன் உரம் தேவை

என்.ஆராச்சி

கேகாலை மாவட்டத்தில் இந்த வருடத்துக்கான பெரும் போகத்துக்காக 314 மெட்றிக் தொன் யூரியா உரம் தேவைப்படுவதாக விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் கேகாலை உதவி ஆணையாளர் புஸ்பா வீரசேகர தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்தில் 22,927 விவசாயிகள் 6,287 ஹெக்டயர் நிலப்பரப்பில் நெல் உற்பத்தியை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கமைய, தற்போது கேகாலை மாவட்டத்துக்கு தேவையான உரம் தொடர்பில் கேகாலை மாவட்ட செயலாளர் மஹிந்த வீரசூரியவின் பணிப்புரையின் கீழ், விவசாய அபிவிருத்தி திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தில், விவசாய திணைக்களத்தின் 14 அலுவலகங்கள் காணப்படுவதுடன் குறித்த அலுவலகங்கள் ஊடாக உரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# அழித்தொழித்து, ஆடக்கியாண்ட அவசரகாலச் சட்டத்துக்குள் நாடு

இலங்கையின் அரசியல் வரலாற்றை சற்று பின்னோக்கி பார்த்தோமெனில், 1942ஆம் ஆண்டுமுதல் ஆட்சியிலிருந்த எந்தவோர் அரசாங்கமும் அவசரகாலச் சட்டத்தை அமல்படுத்தாது, ஆட்சியில் இருந்ததே இல்லை. அந்தளவுக்கு மக்களின் வெறுப்பலைகளுக்கும் எழுச்சிக்கும் போராட்டங்களுக்கும் அஞ்சியே, ஆட்சியில் இருந்தது.

புதிதாக ஆட்சிப்பீடம் ஏறும்போது, மக்கள் நசுக்கும் எந்தவொரு சட்டமும் அமல்படுத்தப்படாது. ஐந்து நட்சத்திர ஜனநாயகத்தின் கீழ், ஜனநாயக ஆட்சியை முன்னெடுப்போமென அச்சமின்றி கூறியவர்கள் எல்லோருமே, ஆட்சியை தக்கவைத்துக்குக் கொள்வதற்காக, ‘அவசரகாலச் சட்டத்தை’ ஓர் ஆயுதமாக அவ்வப்போது பயன்படுத்தியே வந்துள்ளனர்.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் ஆகிய இவ்விரண்டும், எவ்வளவு பயங்கரமானவை என்பதை, இன்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, தமிழர்கள் அனுபவித்து வந்திருக்கின்றனர். இன்றுதான், அது எவ்வளவு பயங்கரமான ஆயுதம் என்பதை, தென்னிலங்கை பெரும்பான்மையின மக்கள் புரியக்கூடியதாய் இருக்கின்றது.

இது ஜூலை மாதம், இலங்கை வரலாற்றில் கறைபடிந்த மாதம்; தமிழர்களின் உணர்வலைகளை கொப்பளிக்கச் செய்த மாதம். 1983 கலவரத்துக்கும் இந்த அவசரக்காலச் சட்டமே மறைமுகமாக ஓர் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது. அதனை வைத்துக்கொண்டுதான், தமிழர்கள் உயிரோடு கொளுத்தப்பட்டனர்; சொத்துகள் சூறையாடப்பட்டன; அழிக்கப்பட்டன.

அரசாங்கத்தின் இரும்பு கரங்களுக்குள் மக்கள் சிக்கி அல்லல்படும் போதெல்லாம், மனித உரிமை அமைப்புகள் குரல்கொடுக்கும். அதேபோல, அவசரகால, பயங்கரவாத சட்டங்கள் தொடர்பில் ஜெனீவாவில் பல தடவைகள் பிரஸ்தாபிக்கப்பட்டன. எதிர்வரும் அமர்வுகளின் போது, மேற்படி இவ்விரு சட்டங்களுக்கு எதிரான கேள்விகளுக்கும் இலங்கை அரசு, பதில்சொல்லியே ஆகவேண்டும்.

ஜெனீவாவின் அழுத்தங்களுக்கு இடையில், அவசரகால சட்டம் 2011 நீக்கப்பட்டது. எனினும், அதிலிருந்த அதிகாரங்கள் பல, நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட ஜனாதிபதிக்கு கைமாறின. 2018 மார்ச் 6, கண்டி-திகன சம்பவத்துக்குப் பின்னர், சில நாள்கள் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த அவசரகாலச்சட்டம், 2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பின், மீண்டும் அமலுக்குக் கொண்டுவரப்பட்டது.

தப்பியோடிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் ஆட்சியிலும் அவசரகாலச்சட்டம் அமல்படுத்தப்பட்டது. பதில் ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, பதவிப்பிரமாணம் செய்த கையுடன், அவசரகாலச்சட்டத்தையும் ஊரடங்குச் சட்டத்தையும் பிறப்பித்தார். எனினும், அச்சட்டத்தை துளியளவேனும் கணக்கிலெடுக்காத போராட்டக்காரர்கள், ஜூலை 13ஆம் திகதியன்று அலரிமாளிகையை கைப்பற்றினர்.

அதற்குப் பின்னரும் போராட்டக்காரர்கள் களத்தில் நின்றுகொண்டிருக்கின்றனர். பதில் ஜனாதிபதிக்கு எதிரான கோஷங்கள் வலுப்பெற்றுள்ளன.

இதற்கிடையில், நாடு முழுவதும் மீண்டுமொரு தடவை அவசரகாலச்சட்டம் நேற்று (18) காலை முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. ஆக, இரும்பு கரத்துக்குள் நாட்டை வைத்துக்கொண்டு, செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

ஒருவருக்கு நெஞ்சத்தில் பலவித போராட்டங்கள் ஆட்கொள்ளும்போது என்னதான் செய்யமுடியும்? கோவில்களுக்குச் சென்று தியானம் செய் என்று சிலர் அறிவுரை கூறுவார்கள். துன்பமான நிலையில் மனதை ஒருநிலைப்படுத்தி, தியானம் செய்ய முடியுமா என ஒரு கேள்வி உண்டாகலாம்.

மனது ஒருநிலையில் இயங்காமல் என்ன காரியம் செய்யலாம்? வாசிக்க விருப்பம் வராது; எப்பொழுதும் செய்யும் காரியங்களில் ஈடுபடவும் ஆர்வம் வராது. ஏன், உணவு உண்ணவும் விருப்பப்பட மாட்டார்கள்.

இந்த வேளையில் தனிமைகூடப் பொருந்தாது. யோசனைகள் தான் அதிகரிக்கும். வெறுப்பு ஓங்கும்போது, ஸ்தம்பித நிலைக்கு மனிதர்கள் ஆட்படுகின்றனர்.

அன்பான இதயங்களை நாடுவதே மனக் குமைச்சலை அழிக்கும் ஒருவழியாகும். மக்களுடன் இணையும்போது, இதய பாரங்கள் மெதுவாகக் கரைந்துவிடும். எம்மிடம் ஒருவரோ அல்லது பலரோ நேயம், ஆதரவு, கனிவு காட்டினால், நான் தனிமைப்பட்டவர் என்ற எண்ணம் வரமாட்டாது.

நல்ல நண்பர்களுடன் பேசிப்பாருங்கள். எல்லாப் பாரங்களும் எப்படிப் பறந்து போயிற்று என்ற நிலை உருவாகும். மக்களோடு மக்களாக இயங்கினால், நீங்கள் ஒருவரல்ல ஒரு கூட்டம் என்பதை தெரிந்துவிடுவீர்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# நாளைய முடிவு விடிவைத் தருமா?

மொஹமட் பாதுஷா

நாடு பெரும் பிரளயத்துக்குப் பிறகு தீர்க்கமான ஒரு கட்டத்துக்கு வந்திருக்கின்றது. புயலுக்குப் பின்னரான அல்லது, இரு புயல்களுக்கு இடைப்பட்ட ஒருவித அமைதியைப் போல, இந்தக் களம் சற்று அமைதி கொண்டிருக்கின்றது.

மக்களின் பிரச்சினைகளுக்கு விடிவு கிடைக்குமா என்பதை, நாளை 20ஆம் திகதி நடைபெறப் போகின்ற இடைக்கால ஜனாதிபதி தெரிவுதான் தீர்மானிக்கப் போகின்றது.

ஜூலை ஒன்பதாம் திகதி மக்கள் பேரணியானது, ஜனாதிபதி மாளிகையின் வாயில் கதவடிக்கு வந்த பிறகு, பின்வழியால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவும் அவரது துணைவியாரும் வெளியேறியிருந்தனர். வெளிநாடொன்றுக்கு தப்பிச் செல்வதற்கான அவரது முயற்சிகள் உடனடியாக பலிக்காது போகவே, கடலிலும் தரையிலும் அலைந்து திரிய வேண்டிய நிர்ப்பந்தத்தை காலம் ஏற்படுத்தியிருந்தது.

ஒரு நிறைவேற்று ஜனாதிபதியாக, சட்டத்தின் ‘விடுபாட்டுரிமை’ இருக்கும் போதே, பாதுகாப்பான இடத்துக்குச் செல்ல வேண்டும் என்று அவர் நினைத்தார். அதன்படி பெரும் பிரயத்தனங்களுக்குப் பின்னர், கோட்டாபய தம்பதியர் இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் மாலைதீவுக்குச் சென்று, அங்கிருந்து சிங்கப்பூருக்குச் சென்றனர்.

முன்னுக்குப்பின் முரணான தகவல்களை வெளியிட்டு, குழப்பிக் கொண்டிருந்த சபாநாயகருக்கு, சிங்கப்பூரில் இருந்தபடி தனது இராஜினாமாக் கடிதத்தை கோட்டாபய அனுப்பி வைத்தார். இவ்வாறிருக்க, இன்னும் 15 நாள்களுக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று, சிங்கப்பூர் அரசாங்கம் கோட்டாபயவுக்கு சொல்லியிருக்கிறது.

ராஜபக்‌ஷ குடும்பம் பதவிகளை விட்டுப் போகமாட்டார்கள் என்ற அபிப்பிராயம்தான் முன்பெல்லாம் காணப்பட்டது. அதற்கு மாற்றமாக, மஹிந்தவும் பசிலும் பதவி விலகியபோதும் கோட்டாபய விடயத்தில் அது சாத்தியமில்லை என்று பலரும் கருதினர்.

“நான் எனது ஆட்சிக்காலம் முடியும் வரை ஜனாதிபதியாக இருப்பேன். அதற்கான மக்கள் ஆணை என்னிடம் இருக்கின்றது” என்று அவர் தொடர்ச்சியாகக் கூறி வந்தார். ஆனால், எல்லாவற்றையும் விட்டுச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை மக்கள் எழுச்சியும் இன்னபிற அழுத்தங்களும் ஏற்படுத்தின.

மக்கள் நம்பியிருக்காத தருணத்தில், கோட்டபாய ராஜபக்‌ஷ ஜூலை 14ஆம் திகதி இராஜினாமாச் செய்தார். ஆனால், சொன்னதைச் செய்கின்ற கனவான் அரசியல்வாதியாக நோக்கப்படுகின்ற ரணில் விக்கிரமசிங்க, மக்கள் எதிர்பார்த்தபடி, பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்யவில்லை.

மாறாக, வெற்றிடமான ஜனாதிபதி பதவிக்கு அரசியலமைப்பு ஏற்பாடுகளின்படி, பதில் ஜனாதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். அவரது சதுரங்க, இராஜதந்திர ஆட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாக இதனைக் கருதலாம்.

இலங்கையின் மிக அறிவார்ந்த அரசியல்வாதியாக நோக்கப்படும் ரணில் விக்கிரமசிங்க, ஆறு தடவைகள் பிரதமராகப் பதவி வகித்துள்ளார். ஒரு தடவை கூட, முழுமையான ஆட்சிக் காலத்தை சுகிப்பதற்கு அவருக்கு கொடுத்து வைக்கவில்லை. அத்துடன் ஜனாதிபதி கனவும் நிறைவேறாமலேயே இருந்தது. இவ்வாறான பின்னணியில், “நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்காகவே நான், பிரதமர் பதவியை பொறுப்பேற்றேன்” என்று அவர் முன்னர் குறிப்பிட்டிருந்தார். ஆயினும், இதற்குப் பின்னால் அமெரிக்காவோ அல்லது வேறு வெளிநாடுகளோ இருந்திருக்குமானால், ஜனாதிபதி கனவை மெய்ப்பிப்பதற்கான ஆசை வார்த்தைகளும் அவருக்கு கூறப்பட்டிருக்கலாம் என்பதே நோக்கர்களின் கணிப்பாகும்.

நாட்டை ஆட்சி செய்த ஒரு கட்சியின் தலைவராக இருந்தும் கூட, கடந்த தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்படாத ஒருவருக்கு, இப்படி ஒரு வாய்ப்பு கிடைப்பது அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

எனவே, பதில் ஜனாதிபதியாகும் வாய்ப்பை தவறிவிட்டு, தான் வாக்குறுதியளித்தபடி இராஜினமாச் செய்யும் முடிவை, விக்கிரமசிங்க எடுக்கவில்லை. அதுமட்டுமன்றி, ஜனாதிபதி தெரிவுக்கான போட்டியிலும் களமிறங்கியுள்ளார். அதற்கிடையில் பல அதிரடி உத்தரவுகளையும் பிறப்பித்துள்ளார்.

அந்தவகையில், நாடாளுமன்றத்தில் நாளை 20ஆம் திகதி இரகசிய வாக்களிப்பின் மூலம் இடைக்கால அரசின் ஜனாதிபதி தெரிவு செய்யப்படவுள்ளார். அதன் பின்னர் பிரதமர் தெரிவு இடம்பெறும்.

இந்தப் பந்தயக் களத்தில், பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப் பெரும, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் குதித்துள்ளனர்.

இதேவேளை, போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகிய தரப்பினர் பின்வாங்கியுள்ளனர்.

இது விடயத்தில், பொதுஜன பெரமுன இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. கோட்டபாய ஆதரவு எம்.பிக்கள் ரணிலையும், மஹிந்த ஆதரவு அதாவது கோட்டாவுடன் உடன்பாடற்ற எம்.பிக்கள் மற்றும் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்கள் டலஸையும் ஆதரிப்பதாகத் தெரிகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு, கோட்டாபயவுக்கு அடுத்தபடியாக அதிக வாக்குகளைப் பெற்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவதற்கு எதிரணியில் உள்ள பல கட்சிகள், உறுப்பினர்கள் முன்வந்துள்ளனர். ஆனால், அவரது அண்மைக்கால இயங்குநிலையின் அடிப்படையில் அவருக்கான ஆதரவுத்தளம் எவ்விதம் அமையும் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாதுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.) கட்சிக்கு, மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இலங்கை அரசியல், பொருளாதார நிலைமைகளை குறுக்குவெட்டாக நோக்குகின்ற இவரைப் போன்றவர்கள் ஜனாதிபதியாக வர வேண்டும் என்று பொதுவாகப் பேசப்பட்டாலும், அது இன்றுவரை நடைமுறைச் சாத்தியமற்றதாகவே இருக்கின்றது.

இவ்வாறான பின்னணியில், நாளை நாடாளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது. பெரும் மக்கள் எழுச்சியை முன்னின்று நடத்தி, பல இழப்புகளைச் சந்தித்த போராட்டக்காரர்கள் மட்டுமன்றி, நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இந்த முடிவு தமக்கு விடிவைத் தருமா எனக் எதிர்பார்த்துள்ளனர்.

ஆனால், கடந்தகால முறைசார் தேர்தல்களை போலவே, இந்த இடைக்கால ஜனாதிபதி தெரிவையும் கட்சிகளும் அரசியல்வாதிகளும் தமது சுயஇலாப அரசியலின் அடிப்படையிலேயே நோக்குகின்றனர். இதற்கிடையில், குறிப்பிட்ட சில வெளிநாடுகளின் விருப்புவெறுப்புகளும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இந்த வாக்கெடுப்பில் யாரையும் ஆதரிக்கப் போவதில்லை என்ற அறிவிப்பை சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ளார். வேறு சில கட்சிகள், தமது நிலைப்பாட்டை அறிவிக்க நல்ல நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் புளொட், டெலோ ஆகியவை ‘இந்த அரசாங்கத்தில் அங்கம் பெற மாட்டோம்’ என்று கூறியுள்ள நிலையில், கூட்டமைப்பு கடைசித் தருணத்திலேயே முடிவெடுக்கும் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஏனைய சில தமிழ் கட்சிகள், இன்னும் இறுதி முடிவெடுக்கவில்லை.

இதேவேளை, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் கட்சிகள் உத்தியோகபூர்வமாகவும் பகிரங்கமாகவும் தமது நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. பெரும்பாலும் அவர்கள் சார்ந்திருக்கின்ற சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவையே எடுப்பார்கள் என்பது வெளிப்படையானது. அதேபோல தேசிய காங்கிரஸ் தலைவரான அதாவுல்லா டலஸுக்கு ஆதரவளிப்பார்.

முஸ்லிம் கட்சிகள் மற்றும் அதன் எம்.பி.க்கள் தொடர்பில் இங்கு இரண்டு விடயங்கள் கவனிக்கத்தக்கவை. முதலாவது, ஹக்கீமும் ரிஷாட்டும் என்ன முடிவெடுத்தாலும் அது யாருக்குச் சார்பாக இருந்தாலும், கட்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த நிலைப்பாட்டுடன் உடன்பட்டு வருவார்களா என்பது நிச்சயமில்லை.

இரண்டாவது, தலைவர்கள் இருவரும் நேரடியாக மு.காவிலும் ம.காவிலும் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லர். அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக தெரிவு செய்யப்பட்டவர்கள்.

மு.காவில் நேரடியாக தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு எம்.பி, இப்போது அமைச்சராகவுள்ள நஸீர் அஹமட் ஆவார். மக்கள் காங்கிரஸின் நேரடியான ஒரேயொரு எம்.பி முஸாரப் ஆவார். இவர்கள் இருவரும் கட்சியோடும் இல்லை; தலைவரோடும் இல்லை. கட்சியோடு பெயரளவிலாவது உறவு கொண்டாடுகின்ற எம்.பிக்களாவது இந்தத் தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டு செயற்படுவார்களா என்பது நிச்சயமில்லை. அதுதான் கடந்தகால அவதானிப்பும் ஆகும்.

இதைவிட முக்கியமான விடயம், முஸ்லிம் கட்சிகளும் மொத்தமாக நாடாளுமன்றத்தில் உள்ள 20 முஸ்லிம் எம்.பிக்களும், பொதுவாக மக்கள் நலன் சார்ந்து தீர்மானம் எடுப்பார்களா என்பது, எல்லாவற்றையும் விட பெரிய சந்தேகம் தோய்ந்த கேள்வியாகும்.

கடந்த காலத்தில், முஸ்லிம் மக்கள் பெரும் நெருக்கடியைச் சந்தித்த போது, முஸ்லிம் எம்.பிக்கள் ராஜபக்‌ஷர்களுக்கும் ரணிலுக்கும் சஜித்துக்கும் ஏதோ ஒருவகையில் முண்டு கொடுத்துக் கொண்டே இருந்தனர்.

தேர்தல்கள், சட்டமூலங்கள் வந்தபோது சமூக நலன் என்ற கண்ணோட்டத்தில் அவர்கள் முடிவை எடுக்கவில்லை. மாறாக, அமைச்சுப் பதவிகள், தமது அரசியல் எதிர்காலம் மற்றும் இன்னபிற ‘சந்தோசங்களுக்காகவே’ ஆதரவு, எதிர்ப்பு நிலைப்பாடுகளை எடுத்தனர்.

நாளை இடைக்கால ஜனாதிபதியை தெரிவு செய்வதிலும் அவ்விதம் செயற்படக் கூடாது. நாட்டு மக்களின் பொதுவான பிரச்சினைகளை மனதில் கொண்டு, யாருக்கு ஆதரவளிப்பது என்ற நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நான்கு பேரில் எந்தவொரு வேட்பாளரும் இந்த நாட்டின், மக்களின் பொதுவான நெருக்கடியை தீர்த்து வைப்பதற்காக, தன்னிடமுள்ள திட்டங்களை முன்வைத்தோ, அதற்கு தனக்குள்ள இயலுமையை காண்பித்தோ யாரும் எம்.பிக்களிடம் வாக்குக் கேட்கவில்லை.

இதில் என்ன ஆச்சரியம் என்றால், ஜனாதிபதியும் பிரதமரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ‘நாட்டை ஆள்வதற்கு பொருத்தமற்றவர்கள்’ என்ற தோரணையில் ஒரு போராட்டத்தை நடத்திய மக்கள், அதன் வெற்றிக்கனியை பறிக்கும் வாய்ப்பை, மீண்டும் பாராளுமன்றத்திடமே கொடுத்திருக்கின்றார்கள் என்பதுதான்!

## கடிதங்கள்

### விசுவமடுவில் வாழைகள் அழிவு

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் காற்றுடன் கூடிய வானிலை காரணமாக, வாழைப் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட விசுவமடு பகுதியில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு வருடமும் கடும் காற்று காரணமாக, தமது வாழ்வாதாரமாக வைக்கப்பட்டுள்ள வாழைகள் அழிவடைந்து வருவதாகவும், இது தொடர்பாக விவசாயிகள் திணைக்களம் மற்றும் கமநல சேவைத் திணைக்களம் என்பவற்றில், ஒவ்வொரு வருடமும் இடம்பெறுகின்ற அழிவுகள் தொடர்பாகத் தெரிவித்தும், அவர்கள் வந்து மதிப்பீடு செய்வது மாத்திரமே நிகழ்கின்றது எனவும், அதற்கான நட்டஈடு ஒருபோதும் கிடைக்கப் பெறவில்லை என்றும் விவசாயிகள் தெரிவித்தார்கள்.

அந்த வகையில், இம்முறையும் கடும் காற்று காரணமாக பல விவசாயிகளின் வாழைச் செய்கைகள் அழிவடைந்து உள்ளதுடன், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, எரிபொருளை அதிக விலைக்கு 1,200 ரூபாய்க்கு கொள்வனவு செய்து, வாராந்தம் நீரைப்பாச்ச வேண்டியுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தி, விவசாயிகளுக்கு உரிய நட்டஈட்டைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதியில் உள்ள விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

–யதுபாஸ்கரன்



# அதிர்ச்சி கொடுத்த வரலட்சுமி

சுப்ரீம் ஸ்டார் சரத்குமாரின் மகளும் நடிகையுமான வரலட்சுமி சமூக வலைதளங்களில் எக்டிவ்வாக இருப்பார். இந்த நிலையில் அவர் தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில் தனக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு உள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனவே அனைவரும் கண்டிப்பாக முகக்கவசம் அணிந்து கொண்டு பாதுகாப்பாக இருங்கள் என்றும் கொரோனா வைரஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் கடந்த சில தினங்களில் தன்னை சந்தித்தவர்கள் உடனடியாக கொரோனா வைரஸ் அறிகுறிகளை கவனித்து பரிசோதனை செய்து கொள்ளவும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

நடிகை வரலட்சுமி தனக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறி உள்ளதை அனுப்பிய ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தாலும் விரைவில் அவர் குணமாக வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# திரையரங்குகளில் 'சூரரைப்போற்று'

சூர்யா நடித்த 'சூரரைப்போற்று' மற்றும் 'ஜெய்பீம்' ஆகிய இரண்டு திரைப்படங்களும் ரசிகர்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. ஆனால் இந்த இரண்டு திரைப்படங்களும் திரையரங்குகளில் வெளியாகாமல் ஓடிடியில் வெளியானது ரசிகர்களுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் வரும் 23ஆம் திகதி சூர்யாவின் பிறந்தநாள் கொண்டாட இருப்பதை அடுத்து சூரரைப்போற்று மற்றும் 'ஜெய்பீம்' ஆகிய இரண்டு திரைப்படங்களும் திரையரங்குகளில் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.



சென்னையில் உள்ள முக்கிய திரையரங்கில் 'சூரரைப்போற்று' மற்றும் 'ஜெய்பீம்' ஆகிய இரண்டு திரைப்படங்களையும் ஜூலை 23ஆம் திகதி திரையிட உள்ளதாகவும் இதற்கான டிக்கெட் பதிவு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஓடிடியில் இந்த படங்களை பார்த்த சூர்யா ரசிகர்கள் பெரிய திரையில் இந்த படத்தை பார்த்து மகிழ ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.


# 'புஷ்பா 2' வில்லனாக விஜய்சேதுபதி

நடிகர் விஜய் சேதுபதி கடந்த சில ஆண்டுகளாக ஹீரோவாக நடிப்பதை விட வில்லனாக நடிப்பதில் தீவிரம் காட்டி வருகிறார். ரஜினிகாந்த் நடித்த 'பேட்ட' கமல்ஹாசன் நடித்த 'விக்ரம்' விஜய் நடித்த 'மாஸ்டர்' ஆகிய திரைப்படங்களில் விஜய் சேதுபதி வில்லனாக நடித்தார்.

இந்த நிலையில் அல்லு அர்ஜூன் நடித்த 'புஷ்பா' திரைப்படம் கடந்த ஆண்டு வெளியாகி மிகப்பெரிய வெற்றி பெற்ற நிலையில் தற்போது இந்த படத்தின் இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது.

'புஷ்பா 2' வில்லனாக நடிக்க விஜய் சேதுபதியுடன் படக்குழுவினர் ஒப்பந்தம் செய்திருப்பதாகவும் இதற்காக அவர் வாங்கிய சம்பளம் 35 கோடி ரூபாய் என்றும் கூறப்படுகிறது.

ஹீரோவாக நடிக்க வாங்கும் சம்பளத்தை விட இரு மடங்கு சம்பளம் வில்லனாக நடிக்க வாங்கி இருப்பதாக செய்திகள் வெளியாகியிருப்பது திரை உலகில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.



# பிரபல நடிகைக்கு இரட்டை குழந்தை?

நடிகை அலியா பட் கடந்த ஏப்ரல் மாதம் பிரபல நடிகர் ரன்பீர் கபூரை திருமணம் செய்து கொண்டார். இந்த நிலையில் அலியா பட்க்கு இரட்டை குழந்தைகள் பிறக்க வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

அண்மையில் ரன்பிர் கபூர் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோது, 'ஒரு உண்மை மற்றும் ஒரு பொய் சொல்ல வேண்டும்' என தொகுப்பாளினி கேள்வி கேட்க அதற்கு 'நாங்கள் இரட்டை குழந்தையை எதிர்பார்க்கிறோம்' என்றும் 'ஒரு பெரிய சரித்திரக் கதையில் நடிக்கிறேன்' என்றும் தெரிவித்துள்ளார்.

இதில் எது பொய்? எது உண்மை என்பதை நீங்களே கண்டு பிடித்துக் கொள்ளுங்கள் என ரன்பீர் கபூர் கூறிய நிலையில் அலியா பட்டுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறப்பது தான் உண்மை என்று ரசிகர்களால் கூறப்படுவதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.





# ஸ்ருதியின் முதல் மேடை

நடிகை ஸ்ரூதிஹாசன் குட்டிப் பெண்ணாக இருக்கும் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் கமல்ஹாசன் ஒரு நிகழ்ச்சியில் முதல் முறையாக மேடையில் அறிமுகம் செய்துள்ளார்.

சிங்கப்பூரில் நடந்த இந்த நிகழ்ச்சியில் குட்டி பெண்ணாக இருக்கும் ஸ்ரூதிஹாசன் அழகிய தமிழில் பேசி பார்வையாளர்களை அசத்தி உள்ளார். 'நான் சின்ன பெண் தான், நான் பாடிய பாடல் நன்றாக இருந்தால் கை தட்டுங்கள், நன்றாக இல்லை என்றாலும் கைதட்டுங்கள் என்று மழலை குரலில் அவர் கூறியதை அடுத்து அரங்கமே எழுந்து கைதட்டியது.

இந்த வீடியோவை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவு செய்துள்ள ஸ்ரூதிஹாசன் 'இது ஒரு அழகிய நினைவகம் என்றும், எனது முதல் நிகழ்ச்சியில் பாடலை பாடியது நன்றாக நினைவிருக்கிறது என்றும், இந்த நிகழ்ச்சிக்காக அப்பா அம்மாவுடன் நான் பலமுறை ஒத்திகை பார்த்தேன் என்றும் முதல் முறையாக கைதட்டலின் சக்தி என்ன என்பதை நான் உணர்ந்த தருணம் இது' என்றும் அவர் கூறினார்.

சென்னை

கள்ளக்குறிச்சி மாணவி மரண வழக்கு:

# மறுபிரேத பரிசோதனைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு



கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அருகே உயிரிழந்த தனியார் பாடசாலை மாணவியின் உடலை மறுபிரேத பரிசோதனை செய்ய, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சின்னசேலத்தில் உயிரிழந்த தனியார் பாடசாலை மாணவியின் உடற்கூறாய்வு, தகுதியில்லாத மருத்துவர்களால் செய்யப்பட்டுள்ளது. எனவே, மறுபிரேத பரிசோதனைக்கு உத்தரவிடக் கோரி, மாணவியின் தந்தை, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த நிலையில், நீதிபதி என்.சதீஷ்குமார் முன்பு நேற்று (18), அரசுத் தரப்பில் ஆஜரான அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஹசன் முஹமது ஜின்னா, அவசர வழக்காக இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்க வேண்டுமென முறையீடு செய்தார். இதனை ஏற்று, நீதிபதி இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்தார்.

வழக்கு விசாரணையின் தொடக்கத்திலேயே, நீதிபதி பல்வேறு கேள்விகளை எழுப்பினார். "நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டு, போராட்டத்தில் ஈடுபட்டது ஏன்? இந்தப் போராட்டத்தை நடத்த அனுமதித்தது யார்? மாணவியின் இறப்புக்கு காரணம் என்ன? தகுதியில்லாத மருத்துவர்களால் பிரேத பரிசோதனை செய்யப்பட்டுள்ளது என்று எப்படிக் கூறுகிறீர்கள்? நீங்கள் என்ன இந்த துறையில் நிபுணரா என்பது உள்பட, பல்வேறு கேள்விகளை எழுப்பினார்.

மேலும், இதுபோன்ற இயற்கைக்கு முரணான மரணங்கள் தொடர்பான வழக்குகளை சி.பி.சி.ஐ.டி விசாரிக்க வேண்டும். மாணவியின் உடலை மறுபிரேத பரிசோதனை செய்ய வேண்டும். மறுபிரேத பரிசோதனையின் போது மனுதாரர் தனது வழக்கறிஞருடன் இருக்கலாம் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

வழக்கின் அடுத்தக்கட்ட விசாரணை, ஜூலை 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சென்னை



# சின்னசேலம் வன்முறை 329 பேர் கைது

சின்னசேலம் வன்முறை தொடர்பாக இதுவரை 329 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அடுத்த கனியாமூரில் தனியார் மெட்ரிக் மேல்நிலைப் பாடசாலை இயங்கி வருகிறது. கடலூர் மாவட்டம், பெரியநெசலூர் கிராமத்தைச் சேர்ந்த சிறுமி, இந்தப் பாடசாலையில் விடுதியில் தங்கி பிளஸ் 2 படித்து வந்தார்.

பாடசாலையின் விடுதியின் மூன்றாவது மாடியில் இருந்து கடந்த 13 ஆம் திகதி, கீழே விழுந்ததால் சிறுமி உயிரிழந்துவிட்டதாக அவரது பெற்றோருக்கு பாடசாலை நிர்வாகம் தகவல் தெரிவித்தது.

மாணவி உடலில் காயங்கள் இருப்பதாகவும், தங்கள் மகளை கொலை செய்துள்ளதாகவும் கூறி பெற்றோரும் உறவினர்களும் பாடசாலையை முற்றுகையிட்டனர். மாணவியின் உடலை வாங்க மறுத்து, ஐந்து நாள்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

பிரேத பரிசோதனை அறிக்கையில், மாணவி உயிரிழப்புக்கு முன்பே உடலில் காயங்கள் இருந்ததாகவும், அவரது கை, கால்கள் உடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மாணவி உயிரிழந்த விவகாரத்தில் இளைஞர்களின் போராட்டம் கலவரமாக மாறியது. பாடசாலைக்குள் நுழைந்து சூறையாடிய வன்முறை கும்பல், அங்கிருந்த பஸ்கள், பொலிஸாரின் பைக்குகளை தீவைத்து எரித்தது.

சென்னை



# வாக்களித்தார் தமிழக முதலமைச்சர்

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் எதிர்வரும் 24ஆம் திகதியுடன் முடிவடைகிறது. புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான வாக்களிப்பு நேற்று (18) நடந்தது.

இந்தத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக (பா.ஜனதா கூட்டணி) திரவுபதி முர்மு, எதிர்க்கட்சி சார்பில் (காங்கிரஸ் கூட்டணி) யஷ்வந்த் சின்கா வேட்பாளர்களாக போட்டியிடுகிறார்கள்.

இந்தத் தேர்தலில் வாக்களிக்க முதலில் ஆளும் கட்சியான திராவிட முன்னேற்ற கழகத்துக்கும் (தி.மு.க) அதைத் தொடர்ந்து எதிர்க்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ.தி.மு.க) உள்ளிட்ட மற்ற கட்சிகளுக்கும் நேரம் ஒதுக்கி கொடுக்கப்பட்டிருந்தது.

சட்டசபையில் தி.மு.கவுக்கு 125 எம்.எல்.ஏக்களும், காங்கிரஸ்-18, ம.தி.மு.க-4, விடுதலை சிறுத்தைகள்-4, இந்திய கம்யூனிஸ்ட்-2, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்-2, மனிதநேய மக்கள் கட்சி-2, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி-1, தமிழக வாழ்வுரிமை கட்சி-1 எம்.எல்.ஏக்களும் உள்ளனர்.

அ.தி.மு.கவில் உள்ள 65 எம்.எல். ஏக்களில் எடப்பாடி பழனிசாமி அணியில் 62 எம்.எல்.ஏக்கள், ஓ.பன்னீர் செல்வம் அணியில் 3, பா.ம.க-5, பா.ஜனதா-4, புரட்சி பாரதம்-1 ஆகியோர் உள்ளதால், இவர்கள் வாக்களிக்க ஏதுவாக அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருந்தன.

இந்தியா



# செருப்பு அணிந்து ஓட்டினால் அபராதம்

இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனம் ஓட்டுபவர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் சில விதிகள் மற்றும் பாதுகாப்பு மீறல்கள் தொடர்பாக நிபந்தனைகள் விதித்து உள்ளன.

இந்தியாவில் வாகனம் ஓட்டும் போது, நீங்கள் சரியான உடைகளை அணிந்து இருக்க வேண்டும். குறிப்பாக, இரு சக்கர வாகன ஓட்டிகள் தங்கள் வாகனத்தில் செல்லும்போது, முழுமையாக மூடிய காலணிகளை அணிய வேண்டும். சாதாரண செருப்பு அணிந்து வாகனம் ஓட்டினால் 1,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

அத்துடன், ஒரு நபரிடம் இரண்டு ஓட்டுநர் உரிமங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அந்த நபர் அபராதம் செலுத்த வேண்டும். வாகனம் ஓட்டும் போது அலைபேசியில் பேசக்கூடாது. ஆனால் இதில் விதிவிலக்கு உள்ளது. எந்தவோர் ஓட்டுநரும் தங்கள் வாகனத்தை இயக்கும் போது, வழி கேட்பதற்காக அலைபேசியை பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவை

# தக்காளிகளை குப்பையில் வீசிய விவசாயிகள்

தமிழகத்தில் கோவை மாவட்டம், கிணத்துக்கடவு தாலுகா பகுதியில், 60க்கும் மேற்பட்ட கிராமங்களில் தக்காளி முக்கிய விவசாயமாக இருந்து வருகிறது

இங்கு கொள்முதல் செய்யப்படும் தக்காளிகளை கேரளா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும் வியாபாரிகள் அனுப்பிவைக்கின்றனர். கடந்த சில மாதங்களாக 15 கிலோ கிராம் அளவு கொண்ட ஒரு பெட்டி ரூ.1,000 வரை விற்பனையானது. தற்போது கனமழையால் தக்காளி விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒரு பெட்டியின் விலை ரூ.50க்கும் கீழ் சென்றது. தக்காளி பழுங்கள் விற்பனையாகாமல் கிடப்பில் கிடந்தன. இதனால், கவலையடைந்த விவசாயிகள், தாங்கள் கொண்டு வந்த தக்காளியை குப்பையில் கொட்டிவிட்டு சென்றனர்.

### இன்றும் (19) நாளையும் (20) பாராளுமன்றத்தில்

# நடைபெறப்போவது என்ன? சரியாகத் தெரிந்துகொள்ள...

இந்நாட்டின் பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியைத் தெரிவு செய்வது தொடர்பில் இதற்கு முன்னர் ஒருமுறை அனுபவம் இருக்கின்றபோதும் இம்முறை இது விசேடமாகக் காணப்படுகிறது. இதற்கு முன்னர் 1993ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ மறைந்ததைத் தொடர்ந்து அப்போதைய பதில் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க, பிரேமதாஸவின் எஞ்சிய காலத்துக்காக வாக்கெடுப்பு இன்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். ஆனால், இம்முறை வேட்பாளர்கள் சிலர் போட்டியிட இருப்பதாக ஏற்கெனவே கூறப்பட்டிருப்பதால் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டியிருக்கும். அப்படியாயின் அது எமது நாட்டின் வரலாற்றில் புதிய அனுபவமாக இருக்கும்.

பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஜனாதிபதி பதவி வெற்றிடமாயின், பாராளுமன்றத்தின் மூலம் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்யும் நடைமுறை அரசியலமைப்பு மற்றும் 1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கமைய இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்களும் குறித்த சட்டத்தில் படிப்படியாக வழங்கப்பட்டுள்ளன.





### 19ஆம் திகதி நடைபெறுவது என்ன?

- ஜனாதிபதிப் பதவி வெற்றிடமாகியுள்ளது என அறிவிக்கப்பட்டு 48 மணித்தியாலங்களுக்கு (இரண்டு தினங்கள்) முற்படாததும், ஏழு நாட்களுக்குப் பிற்படாததுமான தினமொன்றை பாராளுமன்ற செயலாளர் நாயகம் வேட்புமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான தினமாகவும் அதற்கான நேரத்தையும் தீர்மானிக்க வேண்டும்.

- இதற்கமைய, 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பாராளுமன்றம் கூடி வேட்புமனுக்களை சமர்ப்பிக்க வேண்டும் என செயலாளர் நாயகம் கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை அறிவித்தார்.

- இந்த அறிவிப்புக்கு அமைய வெற்றிடமாகியுள்ள ஜனாதிபதி பதவிக்காக வேட்புமனுக்களைப் பெற்றுக் கொள்வது மாத்திரமே 19ஆம் திகதி இடம்பெறும்.

- வேட்புமனுக்களைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறையை முன்னெடுக்கும் அதிகாரியாக அல்லது தெரிவத்தாட்சி அலுவலராக பாராளுமன்ற செயலாளர் நாயகமே செயற்படுவார்.

- ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அந்தப் பதவியில் செயற்படுவதற்கு விருப்பம் என்பதை எழுத்து மூலம் முன்னரே தெரிவிப்பது அவசியம்

- வெற்றிடமாகியுள்ள ஜனாதிபதி பதவிக்குத் தேர்வுசெய்வதற்காக முன்மொழிய எதிர்பார்திருக்கும் அனைத்து உறுப்பினர்களும் தம்மால் முன்மொழியப்படும் உறுப்பினர் ஜனாதிபதிப் பதவிக்கு சேவையாற்றத் தெரிவுசெய்யப்பட்டால் அதற்குத் தான் தயார் என்பதை எழுத்துமூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட எழுத்துமூல விருப்பம் வேட்புமனுப் பெற்றுக்கொள்ளும் 19ஆம் திகதி செயலாளர் நாயகத்திடம் கையளிக்க வேண்டும்.

- வெற்றிடமாக உள்ள ஜனாதிபதி பதவிக்குப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பெயரை முன்மொழியும்போது அரசியலமைப்பின் 92வது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியிழப்புகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

- இதற்கமைய அன்றையதினம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் செயலாளர் நாயகத்தை விளித்து அன்றையதினம் பாராளுமன்றத்துக்கு வருகைதந்துள்ள மற்றுமொரு உறுப்பினரின் பெயரை ஜனாதிபதி பதவிக்கு முன்மொழியலாம். அவ்வாறு முன்மொழியப்பட்ட உறுப்பினர் அன்றையதினம் பாராளுமன்றத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும். அதன் பின்னர் இப்பெயரை மற்றுமொரு உறுப்பினர் வழிமொழிய வேண்டும். இது குறித்து விவாதம் நடத்த முடியாது.

### ஒரு உறுப்பினரின் பெயர் மாத்திரம் முன்மொழியப்பட்டால்...?

ஒரு உறுப்பினரின் பெயர் மாத்திரம் முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டிருந்தால் குறித்த உறுப்பினர் வெற்றிடமாகவுள்ள ஜனாதிபதிப் பதவிக்குப் பாராளுமன்றத்தின் மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பதை அன்றையதினமே பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவிப்பார். இவ்வாறான சூழ்நிலையில் இந்த நடைமுறை விரைவில் முடிவுக்கு வரும் (1993ஆம் ஆண்டு டி.பி விஜேதுங்க இவ்வாறே தெரிவுசெய்யப்பட்டார்)

### 20 ஆம் திகதி நடைபெறுவது என்ன?

- ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டால், வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து இரண்டு நாட்கள் பிந்தாத ஒரு தினத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

- அதற்கமைய, 19 ஆம் திகதி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெயர்கள் முன்மொழியப்பட்டிருந்தால், 20 ஆம் திகதி ஜனாதிபதிக்கான வாக்கெடுப்புக்காக ஒதுக்கப்படும். இதன்போது பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அலுவலராக செயற்படுவார்.

### வாக்கெடுப்பு எவ்வாறு நடக்கும்?

- வாக்களிப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலர் வெற்று வாக்குச்சீட்டுப் பெட்டியை அல்லது வெற்று வாக்குச்சீட்டுப் பெட்டிகளை உறுப்பினர்களுக்குக் காண்பித்துப் பின்னர் அதனை முத்திரையிடுவார்.

- இந்த வாக்களிப்பில் சபாநாயகருக்கு வாக்களிக்கும் உரிமை காணப்படுவது விசேட அம்சமாகவும்.

- அதற்கமைய வாக்களிப்புத் தொடங்கும்போது தெரிவத்தாட்சி அலுவலராக செயற்படும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் வாக்குச்சீட்டைப் பெறுவதற்காக சபாநாயகர் உட்பட ஒவ்வொரு உறுப்பினரினதும் பெயரை அழைப்பார். பெயர் அழைக்கப்படும் போது உரிய உறுப்பினர் தெரிவத்தாட்சி அலுவலரின் மேசைக்கு அருகில் சென்று வாக்குச் சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்போது தெரிவத்தாட்சி அலவலர் உறுப்பினர் முன்னிலையில் வாக்குச்சீட்டின் பின்புறத்தில் தனது முதல் எழுத்துக்களைக் கொண்ட கையொப்பத்தை இடுவார்.

- அதனை அடுத்து, வாக்குச் சீட்டைப் பெற்றுக் கொண்ட உறுப்பினர் ஏற்பாடு செய்யப்பட்ட கூண்டிற்குச் சென்று வாக்கைப் பதிவு செய்து தெரிவத்தாட்சி அலுவலரின் கையொப்பம் தெரியும் வகையில் மடித்து தெரிவத்தாட்சி அலுவலரின் மேசையின் மீதுள்ள பெட்டியில் இட வேண்டும்.

### எவ்வாறு வாக்குச்சீட்டை பதிவு செய்வது?

- ஒரு உறுப்பினருக்கு ஒரு வாக்கு வீதம் கிடைக்கப்பெறுவதுடன், வேட்பாளரின் பெயருக்கு எதிரேயுள்ள கட்டத்தில் '1' எனும் இலக்கத்தை இடுவதன் மூலம் வாகைப் பதிவுசெய்ய வேண்டும். பல வேட்பாளர்கள் காணப்படும் போது விருப்பு வாக்குகளை வழங்குவதற்கு சந்தர்ப்பம் உள்ளது. அதன்படி, வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு அமைய, ஏனைய வேட்பாளர்களின் பெயர்களுக்கு எதிரேயுள்ள கட்டங்களில் 2,3 எனும் வகையில் விருப்பு வாக்குகளை பதிவுசெய்ய முடியும்.

| வேட்பாளரின் பெயர் | விருப்புரிமை ஒழுங்கு |
|---|---|
| 1 (வேட்பாளரின் பெயர்) | |
| 2 (வேட்பாளரின் பெயர்) | |
| 3 (வேட்பாளரின் பெயர்) | |
| 4 (வேட்பாளரின் பெயர்) | |

- இதில், வாக்கைக் குறிப்பிடும்போது உறுப்பினர் ஒருவரினால் வாக்குச் சீட்டில் தவறு ஏற்பட்டிருந்தால் (வாக்குச்சீட்டு பழுதாக்கப்பட்டால் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள) இதனை தெரிவத்தாட்சி அலுவலரிடம் மீண்டும் கையளிக்க முடியும் என்பதுடன், இது தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடையும் பட்சத்தில் வேறு வாக்குச் சீட்டை வழங்க முடியும். அத்துடன், பழுதடைந்த வாக்குச் சீட்டு தெரிவத்தாட்சி அதிகாரியினால் செல்லுபடியற்றதாக்கப்பட வேண்டும்.

- பெயர் அழைக்கப்படும் போது வாக்கு அளிக்காத உறுப்பினர்களின் பெயர்கள் வாக்கெடுப்பு முடிவடைய முன்னர் இரண்டாவது தடவையாகவும் அழைக்கப்பட வேண்டும். அவ்வாறு அழைக்கப்படும்போதும் குறித்த உறுப்பினர்கள் வாக்களிக்காதிருந்தால், அவர்கள் வாக்கெடுப்பிலிருந்து விலகிக் கொண்டார்கள் எனக் கருதப்படுவர்.

### வாக்குகள் எண்ணப்பட்டு வெற்றிபெற்றவர் அறிவிக்கப்படுவது எவ்வாறு? வெற்றிபெற 113 வாக்குகள் பெற வேண்டுமா?

வாக்களிப்பு நிறைவடைந்ததும் ஒவ்வொரு வேட்பாளர்களுக்கும் அளிக்கப்பட்ட விருப்பு வாக்குகள் எண்ணப்படும். வாக்கு எண்ணப்படும் இடத்துக்கு யாராவது வேட்பாளர் செல்வதற்கு விரும்பினால் இதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். இல்லாவிட்டால் அவருடைய பிரதிநிதியாக பிறிதொரு உறுப்பினரை இதற்காக நியமிப்பதற்கான சந்தர்ப்பமும் வேட்பாளருக்கு உள்ளது.

- அளிக்கப்பட்ட வாக்குகளில் செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையில் அரைவாசிக்கு மேலான வாக்குகள் யாராவது ஒரு வேட்பாளருக்குக் கிடைக்குமாயின் குறித்த வேட்பாளர் ஜனாதிபதிப் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பதை தெரிவத்தாட்சி அலுவலர் அதாவது பாராளுமன்ற செயலாளர் நாயகம் உடனடியாக அறிவிப்பார்.

- அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கு மேலான வாக்குகள் எந்தவொரு வேட்பாளருக்கும் வழங்கப்படாத சந்தர்ப்பத்தில் இந்த நடைமுறை சற்று நீளமானதாக இருக்கும். அதன்போது குறைவான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் போட்டியிலிருந்து நீக்கப்படுவார். அவ்வாறு நீக்கப்படும் உறுப்பினருக்கு முதலாவது விருப்பைத் தெரிவித்த உறுப்பினர்களின் இரண்டாவது விருப்பத் தெரிவு உரிய வேட்பாளர்களின் வாக்குகளுடன் இணைக்கப்படும்.

- அவ்வாறு செய்தும் எந்தவொரு வேட்பாளருக்கும் செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கும் அதிகமான வாக்குகள் கிடைக்கவில்லையாயின் ஒவ்வொரு கணக்கெடுப்பின் போதும் குறைந்த விருப்பு வாக்குகளைப் பெற்ற உறுப்பினர்கள் போட்டியிலிருந்து நீக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்ட விருப்பு வாக்குகள் இரண்டாவது, மூன்றாவது விருப்பு வாக்குகளைப் பெற்ற வேட்பாளர்களுடன் சேர்க்கப்படும்.

- இவ்வாறு செய்தும் எந்தவொரு வேட்பாளரும் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கும் அதிகமான எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றுக்கொள்ளவில்லையாயின் மேலே குறிப்பிடப்பட்டது போன்று வாக்கு எண்ணும்போது அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டார் என்பது தெரிவத்தாட்சி அலுவலரினால் சபைக்கு அறிவிக்கப்படும்.

- மேலும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு இடையே வாக்குகள் சமமாக இருந்தால், தெரிவத்தாட்சி அலுவலரின் தற்றுணிபின் பேரில் திருவுளச்சீட்டு போடப்படும்.

- அத்துடன், ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள் வேட்பாளரின் பெயரை செயலாளர் நாயகம் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட வேண்டும்.

பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம்

## பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்டில்
# முன்னிலையில் இலங்கை

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், காலியில் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்த முதலாவது டெஸ்டின் நேற்றைய மூன்றாம் நாளின் தேநீர் இடைவேளையின்போது இலங்கை முன்னிலையில் காணப்படுகின்றது.

தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை 7 விக்கெட்டுகளை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்று 261 ஓட்டங்கள் முன்னிலையில் காணப்படுகின்றது. தற்போது களத்தில் தினேஷ் சந்திமால் 34 ஓட்டங்களுடனும், ரமேஷ் மெண்டிஸ் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். முன்னதாக, குசல் மெண்டிஸ் 76, ஒஷாட பெர்ணாண்டோ 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தனர். பந்துவீச்சில், மொஹமட் நவாஸ் 4, யசீர் ஷா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தனர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 222/10 (துடுப்பாட்டம்: தினேஷ் சந்திமால் 76, மகேஷ் தீக்‌ஷன 38, ஒஷாட பெர்ணாண்டோ 35, குசல் மெண்டிஸ் 21, தனஞ்சய டி சில்வா 14, கசுன் ராஜித ஆ.இ 12, ரமேஷ் மெண்டிஸ் 11 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 4/58, ஹஸன் அலி 2/23, யசீர் ஷா 2/66, நசீம் ஷா 1/53, மொஹமட் நவாஸ் 1/18)

பாகிஸ்தான்: 218/10 (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 119 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரபாத் ஜெயசூரிய 5/82, ரமேஷ் மெண்டிஸ் 2/18, மகேஷ் தீக்‌ஷன 2/68, கசுன் ராஜித 1/42)

இலங்கை: 257/7 (துடுப்பாட்டம்: குசல் மெண்டிஸ் 76, ஒஷாட பெர்ணாண்டோ 64, தினேஷ் சந்திமால் ஆ.இ 34 ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் நவாஸ் 4/74, யசீர் ஷா 3/93)



Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog




ஸ்பெயினின்

# வெயிலின் தாக்கத்தால் 84 பேர் உயிரிழப்பு

ஸ்பெயினில் நிலவிவரும் வெப்பநிலை அதிகரிப்பால் 84 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்பெயினில் அண்மைக்காலமாக பல்வேறு இடங்களில் 40 பாகை செல்சியஸிற்கும் மேலாக வெப்பநிலை காணப்படுகின்றது. இதனால் 10ஆம் திகதியிலிருந்து 12ஆம் திகதி வரை 84 பேர் உயிரிழந்துள்ளனர். வெப்பத்தின் தாக்கமானது இனிவரும் காலங்களில் மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் இதனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்பெயினில் இந்த வருடத்தில் ஏற்பட்ட இரண்டாவது பெரிய வெப்ப அலையாக இது உள்ளது எனவும் கடந்த மாதத்திலும் கடும் வெப்பத்தால் பல மக்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி



## 1 லீற்றர் எண்ணெய்க்கு 1 லீற்றர் பீர்


உலக அளவில் சூரியகாந்தி எண்ணெயின் ஏற்றுமதிக்கு உக்ரேன், ரஷ்யா ஆகிய நாடுகள் 80 சதவீத பங்களிப்பை வழங்கி வருகிறன.

எனினும் ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதியிலிருந்து இடம்பெற்று வரும் போர் காரணமாக சமையல் எண்ணெய் விநியோகம் பாதிப்படைந்துள்ளது.

இதனால் ஜேர்மனி உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் சமையல் எண்ணெய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், போர் தொடங்கியதில் இருந்து பெரும்பாலான பல்பொருள் அங்காடிகளில் சமையல் எண்ணெய் இல்லை எனவும்,மேலும் பல கடைகளில் சமையல் எண்ணெய் கெடுபிடிகளுடன் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சமையல் எண்ணெய் பற்றாக்குறையை சமாளிக்க ஜேர்மனியின் முனிச் நகரில் ஜிசிங்கர் மதுபான சாலை மேலாளர்கள் அதிரடி அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளனர். அதாவது, 1 லீற்றர் சூரியகாந்தி எண்ணெய்யை கொடுத்து, அதே அளவு பீரை வாங்கிக்கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளனர். வெளிச்சந்தையில் 1 லீற்றர் பீரின் விலை 7 யூரோக்கள். ஆனால், 1 லீட்டர் சூரியகாந்தி எண்ணெய் விலை 4.5 யூரோக்கள் என்பதால், அங்கு இந்த சிறப்பு சலுகைக்காக வாடிக்கையாளர்கள் குறித்த மதுபான சாலையில் குவிந்து வருகின்றனர்.

பிரேஸிலில்

## ஆசன வாய் வழி வாயுவால் பெண்ணுக்கு நேர்ந்த சோகம்



பிரேஸிலைச் சேர்ந்தவர் விக்டோரியா டி ஃபெலிஸ். 21 வயதான இவர், சமூக வலைத்தளத்தில் மிக பிரபலமான Influencer-களில் ஒருவர் ஆவார்.

இவரை சுமார், 23 மில்லியன் பேர், இன்ஸ்டா கிராமில் பின்தொடர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், கருத்துத் தெரிவித்த விக்டோரியா, “காதலன் முன்பு வைத்து, ஆசன வாய் வழியே வாயு வெளியேற்ற, தயங்கியதாகவும், இதன் காரணமாக, நிறைய நேரம் வாயுவை கட்டுப்படுத்தவே, உடல் முழுவதும் வேதனை தொடங்கி, மருத்துவமனை வரை செல்ல நேர்ந்ததாகவும் தற்போது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




## இங்கிலாந்துக்கெதிரான
## தொடரைக் கைப்பற்றியது இந்தியா

இங்கிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், மன்செஸ்டரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என தொடரை இந்தியா கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இங்கிலாந்து: 259/10 (45.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: பென் ஸ்டோக்ஸ் 60 (80), ஜேஸன் றோய் 41 (31), மொயின் அலி 34 (44), கிறேய்க் ஒவெர்ட்டன் 32 (33), பென் ஸ்டோக்ஸ் 27 (29), லியம் லிவிங்ஸ்டோன் 27 (31) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹர்டிக் பாண்டியா 4/24, யுஸ்வேந்திர சஹால் 3/60, மொஹமட் சிராஜ் 2/66, இரவீந்திர ஜடேஜா 1/21)

இந்தியா: 261/5 (42.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: றிஷப் பண்ட் ஆ.இ 125 (113), ஹர்டிக் பாண்டியா 71 (55) ஓட்டங்கள். பந்துவீச்சு: றீஸ் டொப்லி 3/35, பிறைடன் கார்ஸ் 1/45, கிறேய்க் ஒவெர்ட்டன் 1/54)

போட்டியின் நாயகன்: றிஷப் பண்ட்

தொடரின் நாயகன்: ஹர்டிக் பாண்டியா

## தள்ளி வைக்கப்பட்ட எல்.பி.எல் இன்னும் இரண்டு வாரங்களில்



ஆரம்பமாகவிருந்த இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான லங்கா பிறீமியர் லீக் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள பொருளாதார நிலைமைகள் காரணமாகவே தொடர் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

போதுமான அனுசரணையாளர்கள் கிடைக்காமை, அணிகளது ஆர்வம் குறைவடைந்தமை காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார நிலைமை மேம்படுவதிலேயே இவ்வாண்டு தொடர் நடைபெறுமா என்பது காணப்படுகிறது.

## கொழும்பிலிருந்து காலிக்கு மாறிய 2ஆவது டெஸ்ட்



இலங்கையில் தற்போதுள்ள நிலைமை காரணமாக இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட்டாவது கொழும்பிலிருந்து காலிக்கு மாற்றப்பட்டுள்ளது.

சுற்றுப்பயணம் தொடர்பான ஏற்பாட்டுப் பிரச்சினைகளை இலகுவாக்குவதற்கு இது உதவும் என இரண்டு நாட்டு கிரிக்கெட் சபைகளும் தீர்மானித்ததாக இலங்கை கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.











## முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக் தொடர்:
## சம்பியனானது செம்மலை உதயசூரியன்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக்கால் நடத்தப்பட்ட 23 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான அணிக்கு 11 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் செம்மலை உதயசூரியன் சம்பியனானது.

20 அணிகள் பங்கேற்ற இத்தொடரில், முல்லைத்தீவு நகரிலுள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கள்ளப்பாடு உதயத்தை வென்றே உதயசூரியன் சம்பியனானது.

இப்போட்டியின் பெனால்டியில் 3-2 என்ற ரீதியிலேயே உதயசூரியன் வென்றிருந்தது.

இறுதிப் போட்டியின் நாயகனாக உதயசூரியனின் கு. டிசாந்தும், தொடரின் நாயகனாக உதயத்தின் எஸ். புகழேந்தியும், சிறந்த கோல் காப்பாளராக உதயசூரியனின் வி. சாருஜனும், சிறந்த பின்கள வீரராக உதயத்தின் ரீ. மதுசனும் தெரிவாகினர்.

பிரித்தானியா



## சுட்டெரிக்கும் சூரியனால் 2 நாள்களுக்கு அவசரநிலை பிரகடனம்

பிரித்தானியாவில் கடந்த சில நாள்களாக கடுமையான வெப்பநிலை நிலவி வருகின்றது.

இந்நிலையில் நாட்டின் நிலவும் கடும் வெப்பத்தால் தேசிய அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளதோடு, இரண்டு நாள்களுக்கு மக்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் எனவும், இரண்டு நாள்களுக்கு ரயில் சேவைகள் இரத்து செய்யப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வரும் நாள்களில் வெப்பநிலையானது மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் பிரித்தானிய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆம்புலன்ஸ் உள்ளிட்ட உயிர்காக்கும் சேவைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## கழிவறையில் பெண்ணுக்கு காத்திருந்த அதிர்ச்சி



ஃப்ளோரிடா பகுதியைச் சேர்ந்த மிட்செல் என்ற பெண், கடந்த சில தினங்களுக்கு முன்னர், தனது வீட்டில் உள்ள கழிவறைக்கு சென்ற போது, அவரது கழிப்பறைத் தொட்டியில் உடும்பு இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். இதனையடுத்து உடனடியாக இது குறித்து விலங்குகளைக் கைப்பற்றும் மையத்திற்கு தகவல் தெரிவித்துள்ளார். அதன் படி, உடனடியாக அங்கு வந்த ஹெரால்டு ரோண்டோன் என்பவர், அந்த உடும்பை மீட்டு வெளியே எடுத்துச் சென்றார்.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த ஹெரால்டு, “கடந்த நான்கு நாள்களில் இப்பகுதியை சுற்றியுள்ள வீட்டின் கழிவறையில் இருந்து, மூன்று உடும்புகளை கைப்பற்றி உள்ளேன்” என்றார். அது மட்டுமில்லாமல், கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 30க்கும் மேற்பட்ட ஊர்வனவற்றை அங்குள்ள வீடுகளின் கழிவறையில் இருந்து கைப்பற்றியதாகவும் கூறியுள்ளார். இதற்கு காரணம், இப்பகுதிக்கு பல உடும்புகள் செல்லப் பிராணியாக வளர்க்க கொண்டு வந்ததாகும்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் செவ்வாய்க்கிழமை, 19 ஜூலை 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.